Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாஸன் எழுதுகிறார்)

இவ்வாறு நமதிளவரசன் இச்சிற்றின்பவீட்டில் அன்பும், இன்பும் அல்லது இவ்வுலகத்தாருக்கு வரும் மூப்பும், பிணியும், மரணமும், துன்பமும் பரும், உபாஸதயும் தாக்கும் பொழுதுண்டாகிற அற்புத அனுபவங்களின் மூலமாயொழிய வேறுவிதத்தில் அறியாதவனாய் சில காலம் வாழ்ந்து வந்தான். அப்படி யசோதையின் மடிமீது தலைவைத்து நித்திரைசெய்யும் பொழுது காணும் சொப்பனங்களின் நடுவில், ஐயோ! இவ்வுலகின் துயரைக் கண்ணுற்றேன்; கூடியசீக்கிரத்தில் வருவேன் என்று வாய்குழறிப்பேசுவான். அப்பொழுது அவன் முகத்தில் தோன்றிய துன்பக்களையை நோக்கி யசோதை, என் ஐயனேயாது வருத்துகிறது என்று கேட்க அவன் உடனே விழித்துக்கொண்டு தன் சொப்பனத்தின் ஞாபகம் மறைய இனிதாய் புன்னகைசெய்து தனதருகிலுள்ளவர்களில் ஒருவளை வீணையை எடுத்து வாசிக்கச் சொல்லுவான். கானம் ஒரு தடவை பின்வரும் அர்த்தத்தை உள்ளமைந்து தேவர்கள் பாடினதைப்போல் சொப்பனத்தில் தோன்றிற்று.

(சுகந்தை) நாடியலறியும் சுகந்தையடையாதிருக்கும் காற்றின் வார்த்தைகள் நாங்கள். காற்றானது எப்படி ஒரு பொழுது மெதுவாக பெருமூச்சுவிட்டுக்கொண்டும், மறுசமயம் பயங்கரமான இடி முழக்கத்துடன் புயலாயடித்துக்கொண்டும், ஒரு சமயம் ஒவென்றலறிக்கொண்டும் இருக்கிறதோ அதுபோலத்தான் மனிதனது வாழ்க்கையும்.

நாங்கள் எவ்விடமிருந்து எதற்காக வருகிறோமென்பதையும், நீங்கள் எவ்விடமிருந்து எதற்காக உயிர்வாழ்கிறீர்களென்பதையும் நீவிர் அறியமாட்டீர்கள். நாங்களும் இவ்வுலகத்தைப் போலவே மாறுபடும் ஒரு உலகினின்று வருகிறோம். எங்களுக்கதனால் யாது சுகம்?

ஸ்திரம்போலத் தோற்றும் இவ்வின்பத்தினால் உனக்குத் தான் யாது சுகம்? காதலானது எப்பொழுதும் நிலைத்திருப்பதானால் இதில் எதாவது சந்தோஷமிருக்கலாம்; ஆனால் இவ்வலகத்திய விஷயங்களெல்லாம் காற்றைப்போல் மாறுபட்டுக்கொண்டு வீணையால் வாசிக்கும் ஸ்வரங்கள்போல் சிறிது காலமட்டுமே தரித்திருக்கின்றன.

ஓ மாயாபுத்திரா! இவ்வுலகத்தை எப்பொழுதும் வலம் வருவதினாலேதான் இத்தந்திகளின் மூலமாய் எங்கள் விசனத்தைத் தெரிவிக்கிறோம். எத்தனையோ தேசங்களில் திரிந்து எண்ணிறந்த கஷ்டங்களையும் எங்கு பார்த்தாலும் அழுதகண்களையும் பார்ப்பதினாலேயன்றோ நாங்கள் சிரிப்பதில்லை.

ஆனால் நாங்கள் இவ்வுலகத்திற்காக விசனித்தபோதிலும் அதனுடைய பேதமையைப்பார்த்து நகைக்கிறோம். ஏனெனில் தங்கள் மனது ஆசையுடன் கட்டிக்கொள்ளும் வஸ்துக்களெல்லாம் நிழல்போல் பொய்மையானதென்று இவ்வுலகத்தார் அறிவார்களேயானால் இவ்வின்பங்களை நிலைநிறுத்த முயல்வது ஓடுகிற மேகத்தை நிறுத்தப்பார்ப்பது போலென்று விட்டுவிடுவார்கள்.

எப்பொழுதும் அலைந்து கொண்டிருக்கும் காற்றின் வார்த்தைகள் நாங்கள். இராஜ புத்திரா! நீயும் உன்மன அமைதியை நாடியலைவாயாக. காதலைக் காதலர்க்கு விடுத்து இவ்வுலகத்தின் துன்பத்திற்காக தனியாய்க் கடுவழி கடப்பாயாக.

இப்படி நடந்த சில நாளைக்குப் பிறகு ஒரு நாள் மாலையில் தனது அழகிய பெண்டிர்ப்படை சூழ உட்கார்ந்து கொண்டிருக்கும் பொழுது அவர்களில் ஒருவளான சித்தரை என்பவள், நேரம் போவதற்காக விநோதமாய் சமுத்திரக்கரையோரத்தில் ஜனங்கள் தினம் சூரியன் கடலுள் அமிழ்வதைப்பார்க்கும் ஒருதேசத்தைப் பற்றியும், அதிலிருந்த ஒரு மாயக்குதிரையைப்பற்றியும் ஒரு கதை சொன்னாள். அக்கதையைக் கேட்டதும் இளவரசனுக்கு தான் உலகத்திலுள்ள தேசங்களைப்பற்றிக் கற்றதெல்லாம் ஞாபகத்திற்குவந்தது. உடனே அவன் இவ்வுலகமெல்லாம் இம்மதிலுக்குள் அடங்கியிருப்பது போல் இதுவரை என்னுள்ளேயே நினைந்து கொண்டிருந்தேன்; ஆயினும் இப்பொழுது மதிலுக்கு வெளியேபோய் அரசரல்லாத மற்றச் சனங்கள் எவ்விதமாக வாழ்கிறார்களென்பதை அறிய ஆவலுள்ளவனாயிருக்கிறேனென்று அன்று தன்னைப் பார்க்கவந்த அரசனிடம் சொன்னான். அரசனும் அதற்குச்சம்மதித்துப் போனான். உடனே வேலையாட்களை அனுப்பி இளவரசன் நாளை இந்நகரத்தில் காலை பவனிவரப்போகிறார்; ஆனதால் வீதிகளையும் பாதைகளையும் நன்றாய்ச் சிங்காரிக்கவேண்டியது; வீடுமுதலியவைகளையும் புதுப்பிக்க வேண்டியது; அமங்களப் பார்வைகளொன்றும் கண்ணுக்குத் தென்படக்கூடாது; எங்கே பார்த்தாலும் சந்தோஷமாகவே இருக்கவேண்டும் என்றுபறைசாற்றுவித்தான். காலமே இளவரசன் சன்னனென்ற சாரதியினால் நடத்தப்பட்ட இரதத்தின்மேல் ஏறிக்கொண்டு நகரத்தைப் பார்க்கப் புறப்பட்டான்.

அரசனது திட்டப்படி எல்லாம் வெகு மனோகரமாகவேயிருந்தது. அரசனது வெள்ளைக்குதிரைகள் கட்டிய இரதத்தைச் சூழ்ந்துகொண்டு ஜனங்கள் ஆசிகூறியழைத்ததையும், இந்த அன்பும், மரியாதையும் உள்ள ஜனங்கள் உல்லாசமான உடைகளை உடுத்திக்கொண்டு சந்தோஷமாயிருப்பதையும் பார்க்க இளவரசனுக்கு மனம் களித்தது. இதை எல்லாம் கண்டு அவன் இவ்வுலகம் இனிதாயிருக்கிறது; அரசரல்லாத இச்சனங்களும் நல்லவர்களாயும், சந்தோஷமுள்ளவர்களாயுமிருக்கிறார்கள்; இவர்கள் இவ்வளவு களிப்புற்றிருக்க நான் என்ன பாக்கியம் செய்தேன்; இப்படிப்பட்ட நகரங்களில் ஆளுவது எவ்வளவு சந்தோஷகரமானது! நான் வெளியில் வருவதினாலேயே இவர்கள் களிப்புற்றார்களேயானால், சந்தோஷம் எவ்வளவு சுலபமாக அடையக்கூடியது; இச்சிறிய வீடுகளே இந்நகரமுழுவதையும் புன்னகைகளால் ஜ்வலிக்கச் செய்யுமானால், நான் எவ்வளவு வஸ்துக்களை வேண்டாமலிருக்கலாம்; சன்னா, இன்னும் நடத்து, நான் இவ்வுலகத்தை இன்னும் கண்டுகளிக்கட்டும் என்றான்.

---

# வஸ்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரம்.

2-ம் பாகம்.

அத்தியாயம் 15.

மகாத்மாகாந்தி தமது அனுபவங்களைப்பற்றி "யௌவன இந்தியா" பத்திரிகையில் எழுதிவருவதில், 2 வது பிரிவு 15-ம் அத்தியாயம் பின்வருமாறு:—

தென்னாப்பிரிக்காவிலெனது கிறிஸ்தவ நண்பர்களுடன் நான் பழகிய வரலாற்றை மீண்டும் இங்குஎடுத்துரைக்க வேண்டியதாயிருக்கிறது.

என்னுடைய வருங்கால வாழ்வைப்பற்றி மிஸ்டர் பேகர் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். வெல்லிங்டனில் நடந்த ஒரு மகாநாட்டுக்கு என்னை அழைத்துச்சென்றார். ப்ராடஸ்டண்ட் கிறிஸ்தவர்கள் அடிக்கடி மத சம்பந்தமாக அத்தகைய மகாநாடுகள் கூட்டுவது வழக்கம். ஆத்மசுத்தியின் நிமித்தம் அக்கூட்டங்களை அவர்கள் ஏற்பாடு செய்வார்கள். ரெவரண்டு ஆண்டிரு மர்ரே என்ற பெரியார் பிரஸ்தாப மகாநாட்டில் தலைமைவகித்தார். அம் மகாநாட்டின் நடவடிக்கைகளையும், அங்கு தென்பட்ட உற்சாகத்தையும் கண்டு நான் கிறிஸ்தவமதத்தில்சேர்ந்துவிடுவேன் என்று மிஸ்டர் பேகருக்கு நினைப்பு. தெய்வப் பிரார்த்தனையால் ஏற்படக்கூடிய நன்மைகளைப்பற்றி அவர் எனக்கு இடைவிடாமல் சொல்லி வந்தார். கிறிஸ்தவ மதத்தில் சேர வேண்டியது அவசியமென்று எனக்குப்பட்டால் கட்டாயம் சேருவேன் என்று நானும் அவருக்குச் சொல்லி வந்தேன்.

கடைசியாக வெல்லிங்டன் மகாநாட்டுக்குப் போனோம். என்போன்ற ஒரு கறுப்பு மனிதரைத் தோழராக அழைத்துக்கொண்டு சென்றதால் மிஸ்டர் பேகர் மிகவும் கஷ்டப்பட்டுப் போனார். எனக்காக அவர் பல சிரமங்கள் பட்டார். ஒரு ஓட்டலுக்கு நாங்கள் போனபோது எவ்வளவோ சிரமப்பட்டு உள்ளே செல்ல அனுமதி கிடைத்தது. ஆனால் சாப்பாட்டு அறையில் என்னை விட மறுத்துவிட்டார்கள். ஆயினும் மிஸ்டர் பேகர் ஏமாந்து போகிறவரல்லவாகையால், விருந்தாளிகளை யழைத்துச் சொல்லத் தமக்குள்ள உரிமையை வற்புறுத்தலானார். அவர் இன்னும் பல அவஸ்தைகள் பட்டார். அவர்பட்ட கஷ்டங்களை நான் அறிய மாட்டேன் என்று நினைத்தாராயினும், நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன்.

பக்தி வாய்ந்த கிறிஸ்தவர்கள் பலர் பிரஸ்தாப மகாநாட்டில்கூடியிருந்தார்கள். எனக்கு அதைக்குறித்துப் பரமானந்தம் ஏற்பட்டது. ரெவரண்டு மர்ரேயைப்பார்த்தேன். எனக்காகப்பலர் பிரார்த்தனை செய்தார்கள். இனிமையாகப்பாடினார்கள். மகாநாடு 3 நாள் நடந்தது. பல பக்தர்களை அங்கு சந்தித்தேனாயினும், என்னுடைய மதத்தைமாற்றிக்கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை எனக்கு ஏற்படவில்லை. கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தால்தான் மோட்சம் கிடைக்குமென்று எனக்குப் படவில்லை. அதே அபிப்பிராயத்தை சில கிறிஸ்தவ நண்பர்களிடத்திலும் தெரிவித்தேன். அவர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். ஆயினும் நான் என்ன செய்வது?

ஏசுநாதர் ஒருவர்தான் தெய்வாம்சம் அல்லது திரு அவதாரமென்று நான் நம்ப முடியவில்லை. தெய்வத்தின் புத்திரர் ஏசுநாதர்தான் என்று ஏன் சொல்லவேண்டும்? எல்லாரும் கடவுளின் புத்திரர்களல்லவா? ஏசுநாதர் தெய்வத்தையொத்தவர் என்றால், மற்றவர்களும் ஏன் அவ்வாறு இருக்கக்கூடாது? உலகத்தாரின் பாபத்தை ஏசுநாதர் தமது மரணத்தால் போக்கடித்துவிட்டதாக நான் நம்பத் தயாராயில்லை. உருவகப் படுத்திப்பேசினால் ஓரளவு அதில் உண்மையிருக்கலாம். ஏசுநாதரைத்தியாக மூர்த்தியென்று நான் ஒப்புக்கொள்வேன். ஆனால் உலகத்திலே அவர் ஒருவர்தான் பூரணத்துவம் வாய்ந்தவர் என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவர் சிலுவையில் உயிரைத் துறந்ததன் மூலம் உலகத்துக்கு திருஷ்டாந்த புருஷராக விளங்கக்கூடும். ஆனால் அதில் அற்புதம் எதாவது இருப்பதாய்ச் சொன்னால் அதை நம்ப முடியாது. மற்ற மதஸ்தர்கள் வாழ்ந்து அனுபவத்தில் காணாதவற்றைக் கிறிஸ்தவர்கள் கண்டு விட்டதாகச் சொல்லமுடியாது. கிறிஸ்தவ மதக் கொள்கைகளில் அபூர்வமானது எதுவுமில்லை. தியாகத்தைப்பற்றிப் பேசப் புகுந்தால் கிறிஸ்தவர்களைவிட ஹிந்துக்கள் மேம்பட்டவர்கள் என்று நான் சொல்லுவேன். எல்லா மதங்களிலும் கிறிஸ்தவ மதம் உயர்ந்தது என்றாவது அதுவே மாசற்றதென்றாவது நான் ஒப்புக்கொள்ள இயலாது.

எனது கிறிஸ்தவ நண்பர்களுக்கு இதையெல்லாம் சொன்னேன். அவர்கள் கூறிய பதில் எனக்குத் திருப்தியளிக்கவில்லை. கிறிஸ்தவ மதத்தில் எனக்கு நம்பிக்கை யேற்படாததோடு, ஹிந்து மதமும் மாசற்றதென்று எனக்கு அப்போது தோன்றவில்லை. தீண்டாமையையும் எண்ணிறந்த ஜாதி வகுப்புகளையும் உள்ளடக்கிக்கொண்டிருக்கிற மதம் சுத்தமானதாவென்று என்மனதில் சந்தேகம் ஜனித்தது. வேதம் தெய்வீகமானது என்றால் என்னவென்று எனக்குப் புரியவில்லை. பைபிளும் குர்ஆனும் அதேமாதிரியன் இருக்கலாகாதென்று என் மனதுக்குள்ளாகக் கேள்விகேட்டுக்கொண்டிருந்தேன்.

கிறிஸ்தவ நண்பர்கள் மாத்திரமன்றி சேத் அப்தல்லாபோன்ற முஸ்லிம் நண்பர்களும் என்னை இஸ்லாம் சம்பந்தமாகப் படித்தறியும்படி தூண்டி வந்தனர். இஸ்லாத்தின் அழகைப்பற்றி அவர் எனக்கு அடிக்கடி எதாவது சொல்லிக் கொண்டிருப்பார்.

ராய்சந்த்பாய்க்கு என்னுடைய நிலைமையைப்பற்றி நான் எழுதினேன். இந்தியாவிலுள்ள பல மதகுருக்களுக்கும் எழுதினேன். பொறுமையுடன் ஹிந்துமத கிரந்தங்களைப்படித்து வரும்படி ராய்சந்த்பாய் எனக்கு பதில் எழுதினார். என் மனதுக்குக் கொஞ்சம் சாந்தியுண்டாயிற்று. ஹிந்து மதத்திலுள்ள விசேஷ அம்சங்கள் மற்றெந்த மதத்திலும் இல்லையென்று ராயசந்த் எழுதியிருந்தார்.

குர்ஆன் மொழி பெயர்ப்பை நான் வாசித்தேன். இஸ்லாத்தைப்பற்றி வேறு பல் புத்தகங்களும் படித்தேன். கிறிஸ்தவ மத விஷயமாய் எட்வார்டு மெயிட்லண்டு என்ற வருடன் நான் கடிதப் போக்குவரத்து செய்ய வாரம்பித்தேன். அவர் பல புத்தகங்கள் அனுப்பினார். என்னுடைய மத ஆராய்ச்சிக்கெல்லாம் கிறிஸ்தவ நண்பர்கள் தான் காரணமாகையால் அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

# விளக்கவுரைகள்.

சிவ சிவ, ஏசு ஏசு, அல்லா அல்லா என்பவைகளில் விவேகிகளுக்கு வித்தியாசம் தெரியாது. ஆனால் அவிவேகிகளின் மனதிலேயே பேத குணங்களினால் வித்தியாசம் உற்பத்தியாகிறது.

* * *

வித்து செடியாகி, செடிவிருக்ஷமாவது போல தீயகுணங்களுக்கும் நசுக்கும் கருவியின்றேல் வெகுவிரைவில் மிகப் பெரிதாக வளரும்.

* * *

வைத்தியர்களிடமெல்லாம் வியாதிக்கு ஔஷதங்களிருக்குமே தவிர ஆயுளுக்கு மருந்துகளிரா.

* * *

ஜாக்கிரதை தான் விழிப்பாயிருக்கிறதே தவிர விழிப்பு ஜாக்கிரதையாயிருக்கிறதில்லை.

* * *

சிசுவில் அன்புருஅன்னையின் மடியிலிருந்து பொம்மை முதலிய சாமான்களை வைத்து விளையாடும் சிங்கார விளையாட்டு ஒன்று; எண்ணியதை எளிதில் முடிக்கும் வல்லமை மலிந்த வாலிபவயதில் கற்பகக்கனி யினுமினிய காதல் விளையாட்டு மற்றொன்று; இறுதியில் தன் மகன் மகளின் குழந்தைகளோடு இஞ்சுகமெனகொஞ்சிவிளையாடும் ஆனந்தச் செல்ல விளையாட்டு பிறிதொன்று; இம்மூன்று விளையாட்டுகளின் முடிவே ஓர்மானிட ஜீவியத்தின் முடிவுமாகும்.

* * *

அற்புத வைத்திய ரொருவரிருக்கிறார். அவரிடமில்லாத ஔஷதமும் பிணியுமெங்குமில்லை. அவர் யார்? அவரே சுத்த சாத்குண்ய சுயம் பிரகாசபிளம்பு வாகிய பரமேஸ்வரன். அவரை அண்டினாலன்றோ சர்வத்திர பிணிகளும் சாபல்யமாகும்.

* * *

செல்வத்திலெவ்வளவு நன்மையோ அவ்வளவு தீமையுமறைந்திருக்கிறது.

* * *

பொதுவாக மனிதர்களுடைய பெருமை அவர்களிலிருக்கும் சொந்த ஊர்களில் இருப்பதைக்காட்டிலும் அயலூர்களிலேயே அதிகமாக ஜ்வலிக்கிறது. காரணம் வேறிருந்திடிலும் உள்ளூராண்டி சோத்தாண்டி என்பதற்கும் விடையிறுக்க வேண்டியதிருக்கிறது.

அ. கு. அண்ணாமலைநாடார்

## ஆலன்காப்ஹாமனும், அனுமானும்.

(தேவிதாஸன் எழுதுகிறார்)

ஐரோப்பாவில்ஆகாயத்தில் பறக்கும் சாதனங்களை எப்படி விருத்தி பண்ணலாம் என்ற ஆராய்ச்சி மகாயுத்தத்திற்கு பிறகு மிகுந்த பரபரப்புடன் நடக்து வருகிறது. சீரிலுர், லிலத்திலும் சண்டை நடத்துவது நான் நீடித்துச் செல்லுகிற தென்பதைக் கண்டு கொண்ட பின்,ஒரு சில நாளில் எதிரிகளை வெல்வதற்கு ஆகாயப் படையை விருத்தி செய்வதே மேலென்று, ஒவ்வொரு தேசமும் ஆகாயப் படையை அபிவிருத்தி செய்து வருகிறது. நமது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காப்பதற்கு கடற் படையே பிரதானம் என்று நம்பியிருந்தது யுத்தத்தில எம்டன் திருவிளையாட்டல்களும், வடகடல் வழியாய் லார்டு கிச்சனர் ருஷியா போய்ச் சேர முடியாமல் இடைவழியில் அகப்பட்டிறந்ததும், ஆஸ்டிரேலியா, அமெரிக்காப் படைகள் விரைவில் வந்து சேர முடியாமற் போனதிலிருந்து ஆகாய மார்க்கமாக எவ்வளவு துரிதமாய் ஓரிடம் விட்டு ஓரிடம் போகலாமென்ற ஆராய்ச்சியை நமது பிரிட்டிஷார் வெகு வேகமாய்ச் செய்து வருகிறார்கள். கீழ் தேசத்தின் விழிப்பும், யுத்தானுபவமும், மேல் நாட்டிற்கே சற்றச்சத்தைக் கொடுத்திருக்கிறது. பயமுள்ளவன் உஷாராயிருப்பது போல், அச்ச முள்ள ஐரோப்பா விழித்திருப்பதில் விசேஷமில்லை.

ஐரோப்பாவிலிருந்து இந்தியா வழியாய் ஆஸ்டிரேலியாவுக்கு எப்படி எவ்வளவு துரிதமாய்ப் போய்ச் சேரலாமென்பதைக் கண்டுகொள்ள மிஸ்டர் ஆலன்காப்ஹாம் புறப்பட்டு ஆகாய மார்க்கமாய் இந்தியாவுக்கு வந்து, பல விடங்களிலும் பறந்து, ரங்கூன்மார்க்கமாய் ஆஸ்டிரேலியா வரையும் போய்த் திரும்பிவிட்டார் இவர் 158 மணி நேரத்தில் 13000 மைல் ஆகாயத்தில் பிரயாணம் செய்திருப்பதாய்க் கணக்கிடப் பட்டிருக்கிறது.

இவ்வாகாயப் பிரயாணமும் வேகமும் நம்மிந்தியர்களுக்கு வெகு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். சூட்சம உலகத்தில் நடக்கிற வேலைகளையும் தாவரப் பொருட்களின் உணர்ச்சியைக் கண்டறியும் சக்தியையும் உடைய ரிஷி ஜகதீசசந்திர போஸ் முதலிய மகா நிபுணர்கள் இருக்கிறார்களென்றால் மேல்நாட்டார் செய்யும் எவ்வேலைகளையும் பார்த்து ஆகா! என்ன அற்புதமென்றாச்சரியத்துடன் மூக்கில் விரலைவைத்து நோக்கிப் பிரமித்துப் போகிறார்களே யன்றி அவ்வாராய்ச்சித்துறைக்கு ஆசை யுடன் வருவதில்லை. இவ்வபூர்வ ஆராய்ச்சி புராதன காலங்களில் நம்நாட்டிலுள்ளதா? அன்றி புதிதா? நம்முன்னோருக்காவது இது தெரியுமாவென்று கவனிப்பதுமில்லை. இராமராவண யுத்தத்தில் ஆகாயத்தில் மறைந்து சண்டை செய்தார்கள். பாதாளத்தில் பதுங்கி வெளி வந்தார்கள். சுந்தரமாக குதிரையிலேறி அந்தரத்தில் பறந்தான் என்ற நமது புராண காவியங்களெல்லாம் பொய்க்கதை என்று மயங்கினவர்களுக்கெல்லாம் தற்கால ஆகாயப் பிரயாணம் சற்றேனும் முற்கால வுண்மை யுணர்த்தாமலிருக்காது. இன்னும் நமது புராதன சாஸ்திரங்களைச் செவ்வனே ஆராய்ச்சிபண்ணி ஸ்தூலமாய்க் காணப்படும் மாயமாலங்களெல்லாம் ராட்சதச்செய்கை யென்று புலப்படாமற் போகாது. ஒரு இயந்திர சாதனத்தைப் பெற்று அந்தரத்தில் பறந்து செல்வதைப் பார்க்கிலும், அச்சாதனமின்றிப் பறந்து செல்வது எவ்வளவு திறமை என்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? ஆலன் காப் ஹாமனைப் பார்க்கிலும் அனுமான் சிறந்தவன் என்பதற்கும், அளவுகடந்த சக்தி நம்மில் மறைந்து கிடக்கிற தென்பதற்கும் உரிய ஆதாரங்களைப் பார்ப்போம்.

ஸ்ரீராமபிரான் வானரர் துணையுடன் சீதாபிராட்டியாரைத் தேடிச் சென்றக்கால் மகேந்திர மலையிலிருந்து இலங்கை செல்வதற்கு இடையிலுள்ள கடலை எப்படிகடப்பது? யார் செல்வது? யாரால் முடியும்? ஆலோசனையில் சம்சார சாகரத்தைக் கடந்தஷெ அனுமானே இச்சாகரத்தைக்கடக்கக்கூடுமெனவே அனுமானும் மலையாதல் வேலையைச் செய்வதாக ஒப்புக்கொண்டு ஓரேமூச்சில் மகேந்திரமலையிலிருந்து இலங்கை யிலுள்ள பவளமாமலையிற் பாய்ந்தான். எப்படிப்பாய்ந்தானென்பதை கம்ப நாடன் கவிதையால்விளக்குவாம். இக்கடல் தாண்ட அனுமானே தகுதியுடையவன் என சாம்புவந்தர் சாற்றிய வுடனே,

யோசனையொன்று நூறுமுள்ளடி யுள்
[ளதாக
ஈசன் மண்ணளந்த தேய்ப்ப விருங்
[கடலினிதுதாவி
வாசவன் முதலோர் வந்து மலையினு
[மிலங்கைவாழும்
நீசரை யெல்லாம் நூறி நினைத்தது
[முடிப்பன்பின்னும்

வாசவன் முதலோராகிய தேவர்கள் வந்தெதிர்த்தாலும், இலங்கை வாழரக்கரைவென்று நினைத்ததை முடிக்கும் அனுமான் உலகத்தை முடிக்கும் அனுமான் உலகத்தையெல்லாம் ஓரடியாலளந்த மாயனைப்போல் 'விஸ்வரூபங் கொண்டான். அதாவது:- சாண்டோ பயில்வான்களை சர்க்கஸில் சங்கிலியால் கட்டும் போது தேகத்தை எப்படி வாயுவினால் பருத்துக் காட்டுகிறார்களோ, அதேபோல் வாயுவை தன் திரேகத்தில் விருத்தி செய்து கொண்டான். அப்பால்,

வால்விசைத்தெடுத்தவன்றான் மடக்கி
[மார்பொடுக்கிமானத்
தோள்விசைத் துணைகள் பொங்கக்
[கழுத்தினைச் சுருக்கித்தூண்டிர்
கால்விசைத்தடக்கை நீட்டிக்கட்புலங்
[கதுவாவண்ணம்
மேல்விசைத் தெழுந்தானுச்சிவிரிஞ்
[சினுமிரிஞ்சவீரன்

ஒருசிறுகால் வாயைத்தாண்டுவதற்கு நாம் எப்படி நம்மைச்செய்கிறோமோ, அதேபோல் அனுமான் பெருங்கடல் தாவ வேண்டி வாயுவால் ஸ்தம்பிக்கப்பட்ட தன்றேகத்தைத்தயார்ச்செய்து மூச்சடக்கியுயர எழும்பினான்.

தசும்புடைக்கனக நாஞ்சிற்கடி மதிற
[ரித்து நோக்கான்
அசும்புடைப் பிரசத் தெய்வக்கற்பக
[காட்டையண்மி
விசும்பிடைச்செல்லும் வீரன் விலங்கி
[வேறிலங்கைமூதூர்
பசுஞ்சுடற்சோலைத் தாங்கோர் பவள
[மால்வரையிற் பாய்ந்தான்.

மூச்சையடக்கி விசும்பி லெழுந்த அனுமான் இடையில் ஒன்றையுங் கவனியாமல் இலங்கையிலுள்ள பசுமையான சோலை சூழ்ந்த பவளமாமலையிற்குதித்து நின்றான். யாதொரு யந்திரசாதனமின்றி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள கடலை எவ்வளவு சலபமாகத்தாண்டி யிருக்கிறான்? என்பது இதனால் நன்கு விளங்குகிறது. இம்மட்டோ இன்னும் பார்ப்போம்.

இந்திர ஜித்தன் நாகபாசக்கணையால் யாவரையும் கொன்று விட்ட போது, நாகபாசக்கணை எப்படி யென்பதை ஐரோப்பா யுத்தத்தில் விஷப்புகைப் பிரயோகத்தை எண்ணிப்பார்க்கவேண்டும். வாயு புத்திரனான அனுமான் சாக மாட்டானே என்று சாம்புவந்தர் தேடிப்பிடித்து, நாகபாசக்கணையால் மாண்ட யாவரையும் உயிர்ப்பிக்கவேண்டும்; செத்தவர்களைப் பிழைப் பிக்கும் ஓர் மூலிகை மேருவுக் கப்பாலுள்ள காரு விலிருக்கிறது; இன்றிரவு விடியு முன் கொண்டுவந்து சேர வேணுமென்று சாம்புவந்தர் அனுமானுக்குக் கூறுகிறார்.

மேருவினைக்கடந்தப் பாலொண்பதினா
[யிரம் முனயோசனையை விட்டால்
கோனுங்கிநீலகிரி தானிரண்டாயிரமுள
[யோசனை யினிற்கும்
மாருதி மற்றதற்கப்பால் யோசனை நா
[லாயிரத்து மருந்துவைகும்
கார்வரையைக் காணுதி மற்றது காண்
[வித்துயர்க்குக்கரையுங் காண்டி
இப்படி சாம்புவந்தன் கூறியதும் அனு
[மான்
பாய்ந்தனன் பரய்த லோமெம்மலைபாத
[லத்துச்
சாய்ந்ததுகாக்குந் தெய்வஞ் சலித்தன
[கடுத்துவந்து
காய்ந்தனை நீதான் யாவன் கருத் தென்
[கொல்கழறுகென்ன
ஆய்ந்த வனுற்றதன்மையவற்றினுக்கறி
[யச்சொன்னான்

இவ்வளவு வேகமாய்ப் பாய்ந்து தார் வரைக்காவன் வினவுக்கு விடை கொடுத்து விட்டு, சாம்பு வந்தர் சொன்ன சஞ்சி இருப்பின் குறிப்புத் தெரியாமல் அனுமான் மயங்கினான். அப்பாலென் செய்தான் என்றால்,

இங்கு நின்றின்னன மருந்தென்றெண்
[ணினால்
சிங்குமாற்கால மென்றுணர்ந்த சிந்தை
[யான்
அங்கொது வேரொடுமெங்கைதாங்கினன்
பொங்கு நல்விசும்பிடைக் கடிதுபோகு
[வான்

இங்கு நின்று ஆலோசனை செய்து கொண்டிருப்போமானால் நேரம் விடிந்து போகுமென்று கருதி, சஞ்சிவியிருப்பதாகச் சொன்ன விடத்தை அடியோடு பெயர்த்தெடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். செத்த பிணங்களெல்லாம் உயிர்த் தெழுந்தன. உடனே அம்மலையை ஆகாயமார்க்கமாகவே மீண்டு மிருந்த விடத்திற் கொண்டு போய்ச் சேர்த்து வந்தானென்று கூறப்பட்டிருக்கிறது.

இதனால் என்னதெரிகிறதென்றால், இலங்கை யிலிருந்து மேருவுக்கப்பாலுள்ள காரு பதினாயிரம் யோசனை தூரமுள்ளது. அவ்வளவு தூரத்தை ஓரிரவு விடியுமுன் அனுமான் யாதொரு யந்திரவுதவியுமின்றி ஆகாய மார்க்கமாக இரண்டுமுறை போய் வந்திருக்கிறான். 16 ஆயிரம் யோசனை தூரத்தை 12-மணிநேரத்தில் இருமுறை செயற்கை சாதன மின்றிப் போய் வந்தானென்றால், அனுமானுடைய அபாரசக்தியை யாரால் வர்ணிக்கமுடியும்! என் அவனைத் தெய்வாம்சமுள்ள வனென்று பூஜிக்கமாட்டார்கள். இன்னும் அவனுடைய ஆராதனைக் காரர்கள் அபூர்வசக்தியுடையவர்களாயிருக்கும் அனுபவத்தினால் அவன் அற்புத சக்திமானென்பதை யூகித்துக் கொள்ளலாம்.

ஆகவே ஆலன் காப்ஹாமனைப்பார்க்கிலும் அனுமான் சிறந்தவனென்றே கொள்ளல்வேண்டும். நமதுநாட்டு மக்களும் ஆகாயத்தில் பறந்து செல்வதை ஆச்சரியத்துடன் அண்ணாந்து நோக்கி பல்லை இளித்துப் பல வாறு பேசிக் காலங்கழித்துக் கொண்டிராமல், நம்புராதன முறைகளால் இன்னும் அற்புதமான முறைகளை இவ்வுலகத்தாருக்குக் காட்டலாம் என்ற தைரியத்தோடு பூர்வீக சக்தியை எழுப்புவார்களா? என் அனுமானைப் போல் எல்லோரும் சக்திமானாகக் கூடாது? நம்மில் மறைந்து கிடக்கும் ஆத்மசக்தியை விருத்திசெய்து, தட்டியெழுப்பினால் என் அபாரசக்தியை அடையக் கூடாது?

"வெந்தழலினிரதம் வைத்தைந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்; வேறொருவர் காணாம லுலகத்துலாவலாம்; விண்ணவரை யேவல் கொள்ளலாம்; சந்ததமும் இளமையோடிருக்கலாம்; மற்றொரு சரீரத்திலும் புகுதலா"மென்று சைவ சித்தாந்த ரத்னம் தாயுமான சுவாமிகள் சாற்றியிருப்பதும் பொய்யோ? அனுபவ ஆராய்ச்சித்துறையில் ஒருபடியாவது ஏறாமல் பழைய சாஸ்திரங்களெல்லாம் பொய்;தற்கால நாவல்களைப் போன்ற ஓர் கதையாகவிருக்கலாமென்று தள்ளி விட்டு, அசுரமாய்கைபோல் வெளியரங்கமாய்க்காணும் போலிவேலையைக் கண்டு மயங்கி நின்று விடாமல் பூர்வ சக்தியைப் பூரணமாய்ப் பெற முயல்வதே அறிவுடையோர்செயலாகும். தூலவுலகத்தையாவருங்காணலாம்; சூக்குமவுலகத்தை காண்பதே அரிதிலும் அரிது. அது காண்பவரே அறிவுடையார். கலாசாலைமாணவர்களும், கற்றவர்களும், தற்கால சாஸ்திர வாதிகளும் புதுப்புதுப் போலிகளைக் கண்டு மயங்கி அறிவை அவைகளுக்கடிமைப் படுத்தி விடாமல், ரிஷி பரம்பரைகளைப்போல் ஆத்மஞானிகளாய், அபூர்வசக்திகளாய்,

## மகாத்மா கிறிஸ்தவ வேதம் போதிப்பதேன்?

(ஒரு நிருபருக்குப் பதில்)

மகாத்மா காந்தி கூர்ஜர தேசிய கலாசாலை மாணவர்களுக்கு 'பைபிள்' என்ற கிறிஸ்தவ வேத புத்தகத்திலிருந்து பிரதி வாரமும் பாடஞ்சொல்லி வைக்க சம்மதித்த காரணம் என்னவென்றால், அந்தரங்கத்தில் அவர் கிறிஸ்தவரல்லவா வென்றும், பகவத் கீதையைச் சிறுவர்களுக்கு என் போதிக்கக்கூடாதென்றும் ஒரு நிருபர் மகாத்மாவைக் கேட்டதற்கு, மகாத்மா "யௌவன இந்தியா" வில் பதிலளித்திருக்கிறார். மகாத்மா கூறுவதாவது:-

நான் மாணவர்களுக்கு ஒன்றைப் போதிக்க விரும்பலாம்; மற்றவர்கள் இன்னொன்றைப் போதிக்கும்படி யோசனை சொல்லலாம். ஆனால் நமது விருப்பத்தைவிட மாணவர்களின் கிரமமான விருப்பத்தைத் தான் அதிகமாகப் பொருட்படுத்த வேண்டும். வாரத்துக்கு ஒரு மணி நேரம் பாடஞ் சொல்லிக்கொடுக்கும்படி அவர்கள் என்னை அழைத்த போது, பகவத் கீதை, துளஸிதாஸரின் ராமாயணம் ஆகியவற்றில் பாடஞ் சொல்லி வைக்கட்டுமா, அல்லது அந்த ஒரு மணி நேரத்திலும் ஏதாவது கேள்விகளுக்குப் பதில் சொல்லட்டுமா வென்று அவர்களைக் கேட்டேன். கடைசியாக மாணவர்களில் மிகப் பெரும்பாலர் பைபிள் புத்தகத்தில் "நியூ டெஸ்ட்மெண்டு" என்ற பாகத்தைச் சொல்லி வைக்கும்படி கேட்டுக் கொண்டனர். அதே நேரத்தில் ஏதாவது கேள்விகளுக்குப் பதிலளிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்கள். பைபிள் வாசிக்கவோ, மற்றவர்களை வாசிக்கச் சொல்லிக் கேட்கவோ மாணவர்களுக்கு உரிமையுண்டு. படித்தவர்களாகிய ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பிறமதக்கிரந்தங்களை அபிமானத்துடன் வாசிக்க வேண்டியது கடமையென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். நான் ஸனாதனி ஹிந்து; ஆயினும் குர்-ஆன், பைபிள் முதலிய வேதங்களை சிரத்தையுடன் வாசிப்பது பொருத்தமற்ற காரியமென்று நான் நினைக்கவில்லை. நான் அந்தரங்கத்தில் கிறிஸ்தவர் என்று குற்றஞ் சாட்டுவதில் இது முதல் தடவையல்ல. கிறிஸ்தவ மதமோ, வேறெந்த மதமோ உண்மையென்றுபட்டு அது அவசியமென்றும் தோன்றினால், கட்டாயம் அந்த மதத்தை நான தழுவுவதை யாரும் தடுக்கமுடியாது. ஆனால் இன்னொரு விஷயத்தையும் இங்கு நான் சொல்லிவிட வேண்டும். அதாவது பைபிள் அல்லது குர் ஆனுக்கு நான் கொள்ளும் அர்த்தப்படி, என்னை ஒரு கிறிஸ்தவர் அல்லது முஸ்லீம் என்று நானே அழைத்துக்கொள்ளக் கூடுமானால் அவ்வாறு செய்ய நான் ஸங்கோஜப்படமாட்டேன். ஏனென்றால் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ஹிந்து முஸல்மான் கிறிஸ்தவர் என்ற வார்த்தைகள் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களாகிவிடும்.—ப்ரீபிரஸ்.

(சு—மி)

## ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா 5-வது தேசிய மஹாநாடு.

1926-ம் ௵ அக்டோபர் ௴ 3, 4௳க்கு (புரட்டாசி ௴ 17, 18 ௳) ஞாயிறு, திங்கட்கிழமைகளில் (புதுச் செங்கெல்குளம்) ராமச்சந்திரபுரத்தில் சேலம் ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடுகாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும் என்று சின்னையா நாயுடு எழுதுகிறார்.

---

அற்புத சித்திகளாய் "நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ் சோம்"என்றதைரிய சாலிகளாய் வாழ்வதற்கு மூலகாரணமாயுள்ள இயமநியம ஆசனமபிராணயாம முதலிய யோக மார்க்கங்களை அனுசரித்து பழைய இந்து நாகரீகம் மீண்டும் வந்து சேர வேண்டுமென்று பகவானைத் துதித்து இன்புடன் வாழ எல்லோரும் முயற்சி செய்தால் அன்னிய மானது அன்னியமாகவே ஓடிப் போய்விடும். ஆனந்தம் மேவிடும்! ஆண்டவன் பிராப்தமாவார் !! வேண்டும் வரம்தருவார் !!!

ஓம். சுபம்!

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# நாடார்குலமித்திரன்

அக்ஷய ஞு ஆவணி மீ உ௰அ உ

## தேர்தல் முழக்கம்.

நம் பாரதநாட்டின் பல பாகங்களிலும் தேர்தல் முழக்கமானது அண்டம் வெடித்துப்போகும்படி முழங்கிக்கொண்டிருக்கிறது. கொட்டு முழக்கத்தைக்கேட்டகுரங்கும் கூத்தாடுமென்ற பழமொழிக்கிணங்க மூலை முடுக்குகளிலுள்ள சிறு கிராமங்களிலுங்கூட தேர்தல் என்றால் புதிய ஆவேசங் காணப்படுகிறது. ஜாதி மதத் துவேஷங்கள் விஷம்போலே பிலவுகிறது. பழுத்த தேசாபிமானிகளே இம்முழக்கத்தில் மயங்கிக்கிடக்கும்போது, சாதாரணஜனங்களைப் பற்றி குறைகூறவிடமில்லை. சென்ற தேர்தலில் சட்டசபைக் கூச்சல் மட்டுமிருந்தது. அதுவும் சபைக்குள் போகக்கூடாதென்ற குழப்பந்தானிருந்தது. தற்போது, சட்டசபை முதல் சிறிய பஞ்சாயத்துச் சபைவரையிலுமுள்ள சபைகளனைத்திலும் நுழைய வேண்டுமென்ற பரபரப்பே அதிகமாயிருக்கிறது. தற்போதுள்ள அரசியல் முறையில் நமக்கு யாதொரு பிரயோசனமுமில்லை; நாம் பிரயோசனமடைய நம்மை நாமே திருத்திக்கொள்வதே நன்றென்று மகாத்மா காந்தியிடம் பாடங் கேட்டுக்கொண்ட சிஷ்யவர்க்கங்களுங்கூட கனி, காய், கிழங்கு, உதிர்சருகு புசித்து காட்டிலிருப்பவர்களுக்குத்தான் உமது உபதேசமொக்கும்; நாட்டிலே மேட்டிமையுடன் வசிக்கும் எவர்களுக்கும் உங்கள் போதனை ஏற்காதென்று அவரைத் தனியே விட்டுவிட்டு தலைக்கொரு தனிச்சபை யேற்படுத்திக்கொண்டு தத்துவம் பேசுகிறார்கள். சமயோசிதம்போல்ப் பேசுகிற ஒரு புதிய பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஜாதி மதவெறி அளவுகடந்திருந்தாலும் தேசத்திற்காகவே, மகாத்மா சொற்படியே என்ற போர்வைகளைப் போர்த்திக்கொண்டிருக்கிறார்கள். உயர்ந்தால் லெப்பைஷா, தணிந்தால் பக்கிரிஷா—என்பதுபோல் நடிக்கவும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

சென்னைநகரசபை, சேப்பாக்கம் தேர்தல் காலத்தில் சுயராஜ்யக் கட்சிக்கு முழுத்தோல்வி ஏற்பட்டிருந்தாலும் அது தோல்வியாகாதென்று அக்கட்சிப் பத்திரிகைகள் வியாக்கியானம் செய்துவந்தன. தற்போது நடந்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சிக்கு மூவிடங்களிற் றோல்வி ஏற்பட்டிருந்தும் தோல்வியாகாதென அக்கட்சிப் பத்திரிகைகள் வியாக்கியானம் செய்திருக்கின்றன. எப்படியும் செய்து கொள்ளட்டும்; நமக்குக் கவலையில்லை.

அம்மன்கோவில்டிவிஷனில் ஸ்ரீமான் டாக்டர் ஆசீர்வாதநாடாரவர்கள் பல தடவை தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுஜனங்களுக்காக உழைத்து வந்தவர். நேர் நிதானமும், பரோபகாரார்த்தமும் படைத்தவர். தற்காலத்திலுள்ள கட்சிப்பிரதிகட்சிகளையும், கட்சிக்காரர் சூட்சிகளையும் கண்டு அவர் வெகுநாளாக ஒரு கட்சியிலும் சேராமலும், எக்கட்சிக்கும் உபத்திரவங்கொடாமலும் தன்னுடைய மனச்சாக்ஷிப்படி நியாயமாக நகரசபை நடவடிக்கைகளில் கலந்து வந்திருக்கிறார். எது ஜனங்களுக்கு நன்மையென்று தோன்றுமோ அதையெல்லாம் ஆதரித்தும், தீமையென்று தெரிவதை ரோகரித்தும் வந்திருக்கிறார் அவர் இம்முறையும் அந்த டிவிஷன் பிரதிநிதியாகவே ஒரு கட்சியிலும் சேராமல், எக்கட்சியின் தயவையும் எதிர்பாராமல் தன்கால்ப் பலததிலேயே நின்றார். உலகத்தையே பங்குபோட்டுக்கொள்ள ஆவல்கொண்ட பல கட்சிகளுக்கிடையில் தனியாக நின்று ஜெயிப்பாரா வென்று நாம் சம்சயங்கொண்டோம். ஜஸ்டிஸ் கட்சிக்காரர் தங்களுடைய பலத்தையெல்லாம் பிரயோகித்து அவரை எதிர்த்தார்கள். அவர் ஒரு பிராமணரல்லாதவராயிருந்தாலும் நகரசபையில் சுயராஜ்யக்கட்சிக்கு ஆதரவாயிருந்து வந்திருப்பதால் இப்போது அவரை நாங்கள் எதிர்க்கிறோமென்று பப்ளிக் பிரசங்கம் செய்தார்கள். பத்திரிகை வாயிலால் வெளியீடும் செய்தனர். இப்போது ஆண்டவனருளால் அவர் ஜெயித்தவுடன், அவர் சுயேச்சைவாதியாக நின்று ஜெயித்தாலுங்கூட அவர் ஜஸ்டிஸ்கட்சிக்கே ஆதரவாயிருந்து வந்ததால் அவ்வெற்றி ஜஸ்டிஸ்கட்சியின் வெற்றியாகுமென்று தம் பட்டமடிக்கிறார்கள். இதுவரையும் அவரைப்பற்றி ஒன்றும் பேசாமலிருந்த சுயராஜ்யக்கட்சியும் அவர் எங்களுடைய கட்சியாகையால் எங்களுக்கே வெற்றி; ஜஸ்டிஸ் கட்சிக்குச் சாவு என்று கேள்வி முறையில்லாததுபோல் வெகு துணிவாய்ப் பேசுகிறது. இவ்வாறு எட்டினால்க் குடுமி; எட்டாவிடில்க் கால் என்ற சித்தாந்தம் மலிந்து விளங்குவதால் தேசத்தில் சிறு வகுப்பினர்கள் வெகு விழிப்புடனிருக்க வேண்டிய தவசியமென்பதை நாம் சொல்லவும் வேண்டுமா?

இவ்விதம் தேர்தல் மனமாற்றத்தையும், மயக்கத்தையும், குழப்பத்தையுமுண்டுபண்ணி வாழ்க்கையைச் சோதிக்க வந்த தொடர்பாய்த் தோன்றி துன்பங்களையுண்டுபண்ணி வருகிறது' தாழ்ங்கினவர்களுக்குத் துன்பமென்பதை வலியுறுத்துகிறது. ஆகையால் தேர்தல் முழக்கத்தில் எல்லோரும் சேர்ந்து கொள்வார்கள்.

நமது நாடார்களுக்கும் நல்ல பங்கு கிடைத்திருக்கிறது. பங்கைப் பங்க மில்லாமற்ப் பார்த்துக்கொள்வது அவர்கள் கடமையென்பதை நாம் சொல்லத்தேவையில்லை. சென்னையில் ஸ்ரீமான் ஆசீர்வாதநாடாரவர்களுடைய வெற்றி தென்னாட்டில்நாடார்களுக்குள் புத்துணர்ச்சியையும், உரிமைத்தாகத்தையுமுண்டுபண்ணியிருக்கிறது. அவர்களுடைய உணர்ச்சியையும் முயற்சியையும் சட்டசபைத்தேர்தலில் காட்டுவார். காட்டவேண்டிய வழியையும் முறையையும் பற்றி பிறகு விரிவாக எழுதுவோம்.

## எனது அடிமை வாழ்க்கை.

(பெ. திருமேனிநாதன்)

[முன் தொடர்ச்சி.]

ஆத்மார்த்தமான வழிகளில் என் மனம் சதா சென்றுகொண்டிருக்கும்படியான பழக்கமில்லாத நிலைமையில் சரீரார்த்தமான எனது வாழ்க்கையும் அடிமைப்பட்டதாகுமென்று சென்ற மித்திரனில் வரைந்தேன். ஆத்மார்த்தத்தில் என்மனதை லயிக்கும்படி செய்துவிட்டால். சரீரார்த்தமான வாழ்க்கையிலிருந்து நான் விடுதலை பெற்றவனுவேன் ஆகவே சரீரார்த்தமான வாழ்க்கையிலுள்ள எனது அடிமைத்தனத்தை இனி கவனிப்பாம்.

எனது சரீர அமைப்பிலுள்ள ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற இவைகளின் உபாதையால் நான் பாதிக்கப்படாமல் என்மனதை பழக்கிக்கொள்ளாததாற்றான், சரீரார்த்தமான வாழ்க்கையில் அடிமைப்பட்டுள்ளேனென்று கூறல் பொருந்தும். வீரபராக்கிரமமாகியசக்திகள் என்னிடத்திலிருக்கின்றனவென்ற சில சமயங்களில் இன்புற்று இறுமாப்புக்கொள்ளும் நான், கேவலம் ஐம்புலன்களில் ஒன்றாகிய நாவுக்கு (வாய்) நான் அடிமைப்பட்டு அது சொன்னபடியெல்லாம் நடக்கும் எழ்மைத்தனமான என் நிலைமைக்கு இரங்கவேண்டியதிருக்கிறது. எனது பந்து மித்திராதிய இனத்தவர்களின் க்ஷேமத்தை நாடியும், எனது குலத்தவர்களின் முன்னேற்றத்தைக் கருதியும், எனது தேசவிடுதலையின் பொருட்டும் உழைக்கவேண்டுமென்ற எண்ணங்களால் மார்தட்டி முன் வரும்போது கேவலம் எனது நாவின் ஏவலுக்கு ஆளாயிருந்து, அதைத் திருப்திசெய்வதில் என் காலத்தையும் வீணாகப்போக்குவதற்கு வெட்கப்படவும் வேண்டியதிருக்கிறது. ஒரு மனிதன் தன்னிடத்திலுள்ள எவ்வித சக்தியையேனும் இழந்து மற்றொருவர்க்கு அடிமைப்பட்டு தன் எஜமானனுடைய குற்றேவலுக்கு கைகட்டி வாய்பொத்தி எதிர்பார்த்து நிற்பது போல, என் நாவு ருசிபார்க்க விரும்பும் ஒவ்வொரு உண்டியையும் உட்கொள்ள முயற்சிக்கிறேன். எந்தப்பதார்த்தத்தில் ருசிஇருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன?நமதுசரீரத்திலுள்ள அங்கங்களின்சக்திதளர்ந்துவிடாமல், அவைகளின் வேலையைச்செய்துகொண்டிருப்பதற்காக வயிறார ஓரளவு உணவு உட்கொள்ளவேண்டியது தானே நிரமம்? நாம் உட்கொள்ளும் எல்லாவித ருசியுள்ள பதார்த்தங்களும், நாவைவிட்டு கடந்து தேகத்திற்குள் புகுந்து விட்டால் பாகுபாடின்றி குடல்போய்ச் சேருகின்றனவல்லவா?

பதார்த்த ருசியின் பாகுபாடெல்லாம் நாவு வரையுந்தானே! என் நமது காலத்தையும், புத்தியையும் செலவிட்டு நாவு ருசியின் காரணமாக விரும்பும் உணவைத்தேட அடிமைபோல் முயற்சிக்கவேண்டுமென்ற தெளிவு ஏற்படவில்லை? பசியின்றியிருக்கும் போதுங்கூட நல்லபதார்த்தங்களைக் கண்டால் நாவு ருசிபார்க்கவிரும்புகிறது. அதைத்திருப்திசெய்ய நான் முயற்சித்து விடுகிறேன். அம்மட்டிலே நாவு என்னை தனக்கடிமைப்படுத்திக் கொண்டிருப்பதோடிராமல் டாக்டர்களுக்கும் அடிமைப்படுத்தி விடுகிறது. ருசியின் காரணமாகக் கண்ட பதார்த்தங்களை எல்லாம் கொண்டமட்டும் தின்று அஜீரணத்தாலோ, மற்றும் எவ்வித குணதோஷத்தாலோ வியாதிகளுக்கு இடங்கொடுத்து வைத்தியர் சொன்னபடியெல்லாம் கேட்டுநடக்கவேண்டியதிருக்கிறது. பிறகு டாக்டர் இதைத்தின்னுதே; அதைத்தின்னுதே; இப்படியிருக்கவேண்டும்; அப்படிச் செய்யவேண்டும் என்றிடும் கட்டளைகளுக்கும் ஆளாயிருந்து அவதிப்படவேண்டியதாகிறது. என்னுடைய நாவிற்கே அடிமைப்படக்கூடாது; அது எதை ருசிபார்க்க விரும்பினாலும் திருப்திசெய்யமுயற்சிக்கக்கூடாது; அறுவகை சுவைக்கும் நாம் ஆளாகக்கூடாது; குறிப்பிட்ட ஒருணவைத்திட்டவட்டமாக அளவிட்டு அனுதினமும் முறைப்படி உண்ணவேணுமென்ற பிடிவாதத்துடன் சுமார் இரண்டாண்டுகளாக விருந்தேன் ஆனால் எனது நாவு என் மனதை தன்பக்கபலமாகச் சேர்த்துக்கொண்டு கண்ட பதார்த்தங்களிலெல்லாம் நாட்டம் கொள்ளும்படி செய்துகொண்டுவந்தது. அறிவை பக்கபலமாகக்கொண்டு நாவின் முயற்சிகளை எல்லாம தளர்ச்சிசெய்து கொண்டே வந்தேன். இப்போராட்டத்தின் இறுதியில் நான் தோல்வியுற்றேன். நாளாவிருத்தியிலே தோன்றாமல் நாவிற்கு அடிமைப்பட்டு, அது ருசிகாரணமாகவும் குற்றேவலுக்கு ஆளாகிவிட்டேன். கேவலம் என்னுடையநாவிற்கு அடிமைப்பட்டிருப்பதை நீக்கிக்கொள்ள முடியாத நான், எனது இனத்தவர்களுக்காவது குலத்தவர்களுக்காவது தேசத்தவர்களுக்காவது ஒன்றைச்செய்து விடமுடியுமென்று எப்படி நம்பிக்கை கொள்ளுவது? அடிமைவாழ்க்கையுள்ள ஒருவன் மற்றவர்களுக்கு எதையும் செய்து சாதித்துவிட முடியாதென்பது பொதுவிதி. நாவின் விருப்பத்தின்படி நடக்கவேண்டியது அவசியந்தானு வென்பதையும், அதனாலுண்டாகும் பலாபலன்களையும், மற்றும் புலன்களுக்குநான் அடிமைப்பட்டிருப்பதையும் அடுத்து வரைவாம்.

(தொடரும்.)

## பஞ்சாயத் முயற்சி.

சென்னை கவர்ன்மெண்டாரவர்களின் 1920-ம் வருஷத்திய 15-வது சட்டப்படி நாலுமாவடி, கந்தசாமிபுரம், பள்ளிப்பத்து முதலிய கிராமங்களில் புதிதாய் ஏற்பட்டிருக்கிற பஞ்சாயத்களின் எலெக்ஷன் ஹானரெரி ஆர்கனைசர் ஸ்ரீமான் க. பி. கெங்கை ஆதித்தநாடார் அவர்களால் நடத்தப்பெற்று வருவதுடன், ஷை மூன்று கிராமங்களிலும், ராஜபதி தென்பாகத்திலும் புதிதாக ஸர்க்கார் உதவியால் பஞ்சாயத் ஸ்கூல்களும் ஏற்படப்போகின்றன. கச்சினுவிளைக்கிராம பஞ்சாயத் முயற்சியால், இக்கிராமத்திலுள்ள 6 ஸ்கூல்களில் ஒன்றை நான்காவது வகுப்பிலிருந்து ஏழாவது வகுப்புவரை சர்க்கார் உதவிபெற்று மாற்றவும் தேரிரிசர்வ்பாரஸ்டில் கட்டுக்கரைபோட்டு மழை ஜலத்தைத் தேக்கி விவசாய அபிவிர்த்திசெய்யவும், அம்மன்புரம், பழையகால் ஓரத்திலுள்ள இக்கிராம நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கிற வாட்டர் ரேட் தண்டத்தீர்வையை வஜாபடுத்தவும், இக்கிராமப் பொதுஜன நன்மையைக் கருதி ஓர் பிராஞ்ச்போஸ்டாபீஸ் ஏற்படுத்தவும் பலத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதுடன், பஞ்சாயத் வாரச் சந்தையும் விர்த்தியுடன் நடந்துவருகிறது. இப்பஞ்சாயத்தின் முக்கியமான நன்முயற்சிகளுக்கெல்லாம் இடைவிடாமல் தடைசெய்வதைக் கடமையாய்க் கொண்டுள்ள நபர்கள், பிராஞ்ச் போஸ்டாபீஸ் ஏற்படுத்துவதையும் தடுக்கும் நோக்கத்துடன், பத்திரிகை வாயிலாக எழுதியிருப்பதைத் தவிர இக்கிராமத்தில் போஸ்டாபீஸ் ஏற்படக்கூடாதென ஆக்ஷேபமனுக்களும் அனுப்பியிருப்பதாக அறிந்து விசனிக்கிறோம். நன்மையான முயற்சிகளுக்கு எங்கும் பல இடையூறுகள் ஏற்படுவது சகஜமாதலால், கச்சினுவிளைக் கிராமப் பிரமுகர்கள் விடாமுயற்சியுடன் நன்மையானகாரியங்களைச் செய்து வெற்றி பெற்று வருவது பாராட்டத் தகுந்தது. இதைப்பற்றி வியந்து நாடார் மகாஜன சங்கம் சர்க்கிள் ஆபீஸர் ஸ்ரீமான் கே. எஸ் அருணகிரி நாடாரவர்களும் 12-4-26 மித்திரனில் எழுதியிருக்கின்றார்கள். புதிய சட்டப்படி இந்த பஞ்சாயத் மூலம் கிராமங்களுக்கு சகல நன்மைகளுமுண்டாகக் கூடியதாயிருப்பதால் ஒவ்வொரு கிராமத்திலும் பொது நலங்கருதும் புண்ணிய சீலர்கள் பஞ்சாயத் ஏற்படுத்த முயற்சிப்பார்களாக. நங்கைமொழி, புதுக்குடி, காயாமொழி கொட்டங்காடு, செட்டிகுளம் முதலிய விடங்களிலும் பஞ்சாயத் ஏற்படுத்த மகஜர்கள் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது என ஒரு நிருபர் எழுதுகின்றார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## சமீபித்து விட்டது.

### சென்னை சட்டசபைத் தேர்தல்.

### திருநெல்வேலி ஜில்லா நாடார்கள் கவனிக்க வேண்டும்.

நமது சென்னை மாகாணச் சட்டசபைத் தேர்தல் மிகச் சமீபித்துக் கொண்டிருக்கிறதென்பது நம்மவர்க்கு நன்கு தெரிந்த விஷயமே. சென்ற தேர்தலில் மதுரை ஜில்லா கிராமத் தொகுதிக்கு ஸ்ரீமான் மொ. சி. ஆ. சிதம்பர நாடாரவர்கள் அபேக்ஷகராக நின்று வெற்றி பெற்றார்கள். ஸ்ரீமான் சிதம்பர நாடாரவர்களுக்கு சென்ற தேர்தலில் ஓட்டுக் கொடுத்தவர்களில் நாடார்களைக் காட்டிலும் நாடாரல்லாதவர்களே பெரும்பான்மையோராகும். தன்னைத் தேர்ந்தெடுத்த மதுரை ஜில்லாவாசிகளின் நன்னம்பிக்கைக்கும் பாராட்டுதலுக்கும் பாத்திரமாக ஸ்ரீமான் சிதம்பர நாடார் காலாவிருத்தியில் நடந்து கொண்டுவந்திருக்கிறாரென்பது சட்ட சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டு வந்த அபிமானிகள் உணர்வார்கள்.

ஸ்ரீமான் சிதம்பர நாடாரே வருகிற தேர்தலிலும் அபேக்ஷகராக நிற்கிறபடியால் மதுரை ஜில்லா வாசிகள் அவரைத் திரும்பவும் ஸ்தானத்தில் ஏற்றி வைப்பதில் பின்வாங்கமாட்டார்கள் என்று நம்புகின்றோம்.

நிற்க, தென் ஜில்லாக்களில் நாடார் பெருமக்கள் முக்கியமாக வசிக்கக் கூடியது திருநெல்வேலி ஜில்லா தான். இந்த ஜில்லாவில் நாடார்களின் ஜனத் தொகை மொத்தம் 258553. இவ்வளவு ஏராளமான ஜனத்தொகையுடைய நம்மவர்கள் இந்த ஜில்லாவிலிருந்தும், இதுவரையும் ஒருநாடார் கனவானாவது அபேக்ஷகராய் நின்றிருக்கவில்லை என்றால் இது விசனிக்கத்தக்கதே. ஆனால் இம்முறைத்தேர்தலுக்கு ஸ்ரீமான் அரி. சு. துரைச்சாமி நாடாரவர்கள் அபேக்ஷகராய் நிற்கிறார்கள் என்பதை நம்மனோர் யாவரும் நன்கு அறிவர். ஸ்ரீமான் துரைச்சாமி நாடாரவர்களைப் பற்றி நாம் விரிவாய் எழுதத் தேவையில்லை, நாடார்மகாஜன சங்கம் கான்பரன்ஸ் ஒவ்வொன்றிற்கும் விடாது தொடர்ந்து வந்தவர்கள், ஸ்ரீமான் துரைச்சாமி நாடாரவர்களைப் பிரசங்க மேடையில் பாராமலிருந்திருக்க மாட்டார்கள்.

மகாஜன சமூக முன்னேற்ற விஷயமாய் நிர்ணயிக்கப்படும் ஒவ்வொரு தீர்மானத்திலும் வெகு நுட்பமாய்த் தனது கருத்தைச்செலுத்தி நடவடிக்கைகளில் கலந்துகொள்வார். யாருடைய தயவு தாக்ஷிண்ணியத்திற்கும் தனது மனசாக்ஷியை விட்டுக்கொடுத்துப் பேசக்கூடாதவர். பழுத்த குலாபிமானி. நம் குலத்தவர்களுக்கு விரோதமாவது துரோகமாவது யாரும் எழுதினாலாவது பேசினாலாவது அத்தகையார்க்கு நியாயமான வழிகளில் சமாதானம் எழுதியோ சொல்லியோ அவர்கள் தங்கள் தப்பபிப்பிராயத்தை நீக்கும் வரை வாதிக்கும் ஆற்றல் படைத்தோர். நம்மனோர் ஜில்லா தாலுகா கான்பரன்ஸுகள் மகாநாடுகள் கூடுமிடங்களுக்கு சமயம்வாய்த்த பொழுதெல்லாம் தவறாமல் விஜயஞ் செய்து ஆங்குளோரிடத்து சொற்பெருக்கு நிகழ்த்தி மகாஜனங்களை விழிப்படையச் செய்திருக்கிறார்—செய்து கொண்டிருக்கிறார்—செய்வார். மேலும் திரண்ட செல்வம் படைத்த பிரபல மரவியாபாரியாயிருந்தும் ஆடம்பரமின்றி சாதாரண வாழ்க்கையிலுள்ளவர். தான் ஒருபணக்காரர் என்ற மனோபாவத்தை மறந்த மாசிவாக்கியர். தனது குலத்திற்காகச் செய்ய வேண்டிய கடமை என்று எண்ணி எவ்வளவு தூரம் தனது நேரத்தையும், புத்தியையும் பொருளையும் செலவிட்டுக்கொண்டு வருகிறாரோ அவ்வளவு தூரம் தனது தேசத்திற்கும் தியாகஞ்செய்த பால்ய வீரர். மகாத்மாகாந்தியடிகள் தென்னாட்டுச் சுற்றுப்பிரயாணத்திற்கு வந்திருக்கும் போது, தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலிக்குச் சென்று, மகாத்மாவை நேரில் கண்டு, நம் குலத்தினருக்கும் மற்றவர்களுக்கு முள்ள மனமாச்சரியங்களை மகாத்மா மனதிற்கொள்ளுமாறு தெளிவாய்எடுத்துரைத்தார். தனக்கும் ஸ்ரீமான் துரைச்சாமி நாடாருக்கும் நடந்த சம்பாஷணைக்குப் பிறகுதான் மகாத்மா நாடார்களுடைய நிலைமையைப்பூரணமாய் அறிந்து, நாடாரல்லாதார்களுக்கு ஆணித்தரமான எச்சரிக்கை கொடுத்தார். மகாத்மாவைக்காணவேணுமென்று நாலா திசைகளிலுமிருந்து ஓடிவந்தஜனங்களில் நாடாரல்லாதார்களின் மனதில் பதியுமாறு, நாடார்கள் விஷயத்தைப் பற்றி மகாத்மாவே அன்று பேசும்படி செய்தது நமது ஸ்ரீமான் துரைச்சாமி நாடாரவர்களுடைய சம்பாஷணை தான். ஆகையால் பேச்சிற்றிறமை படைத்தும், ஊழியத்திற் சிறந்தும், வயதில் வாலிபமும் பெற்ற கனம் துரைச்சாமிநாடாரவர்களைத் திருநெல்வேலி ஜில்லா நாடார்கள் தேர்ந்தெடுக்கத் தவறமாட்டார்களென்று நம்புகின்றோம். ஸ்ரீமான் துரைச்சாமி நாடாரவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டியதின் முக்கியமான காரணங்களையும், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கட்சிப் பிரதிநிதிகளையும், அவர்களுடைய சுயநலச் சூழ்ச்சிகளையும், அவர்களின் அந்தரங்கக் குலாபிமானப் பெருக்கத்தையும், வெளிக்கு தேசத்தையும் கட்சியையும் காட்டிக்கொண்டு உள்ளே தங்கள் குலநலத்தை நாடும் விதத்தையும், ஏனையோர் நாடார் அபேக்ஷகருக்கு வெற்றிகிடைக்கக் கூடாதென்ற பொறாமைக்குணத்தினால் செய்யும் எதிர்ப்பிரசாரத்தையும், சென்ற தேர்தலில் நாடார்களுடைய தயவினால் வெற்றி பெற்ற குலத் தொண்டன் ஸ்ரீமான் பிள்ளை ஒருவரின் வாசாமகோசரத்தையும் அடுத்து எழுதுவாம்.

## இரங்கூன் அர்ச். காபிரியேல் ஐக்கிய சபையில் புதிய கிளர்ச்சி.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் இந்த ஆலயம் ஆங்கிலேயக் குருக்களால், ரங்கூன் முனிசிபாலிட்டியாருக்கு சந்தக் கடை கட்டுவதற்காக விற்றுப்போடப்பட்டதும், இதை யறிந்த சபையோர் ஆமோதித்து குருக்களிடம் ஷை ஆலயத்தை திரும்ப வாங்கிக் கொடுக்கும்படி கேட்டும், யானை வாயில் போன கரும்பின் கதி போல் ஆனதும், பின்னும் சபையோர் அத்தொடு விட்டுவிடாது படாத பாடெல்லாம் பட்டு இராப்பகலாய் காவல் செய்ததும், கோர்ட்டில் திரண்ட பணத்தைச் செலவு செய்து வியாச்சித்தும், இனிமேல் இந்தியர்கள் சந்தியில் இழுத்து விடுவார்களென்று அறிந்த கனம் ஆங்கிலத் துரைகள் எடுத்த தந்திர யுக்திகளும், அதனால் சபையோர் ஏமாந்து போனதும், பின் போலீஸ் உத்தியோகஸ்தர்களின் துணையைக் கொண்டு, இருட்டில் கதவை யுடைத்து ஆலயத்தை அலங்கோலப்படுத்தி ஜாமான்களைக் கொள்ளை கொண்டு போனதையும், பின் சபையோர் ஆங்கிலேய உறவே இனிமேல் வேண்டியதில்லை என்று பல இடங்களிலும் போய் யாசகம் எடுத்தும் இன்னும் அனேக கஷ்டப்பட்டும் ஆலயத்தை வாங்கியதையும், அதில் செய்யப்பட்ட ஒவ்வொரு சீர்திருத்தத்தையும் நேயர்கள் அறிந்திருக்கலாம். இதுபோக பெரிய ஆங்கிலக் குருவானவர் கப்பலில் வந்து இறங்கினார். அவரை நேரில் போய்ப் பார்த்து நம் குறைகளை எடுத்துக் கூறினால் எதாவது உதவி செய்வார் என்று நினைத்து வீட்டை விட்டு வெளியேறாத நம் இந்திய மாதுக்களில் சிலர் வெக்கத்தைப் பெரிதெனப் பாராட்டாது கடவுள் ஆலயத்திற்காகப் பாடுபடுகிறோமென மதித்து பூமாலைகளை தயார் செய்து கொண்டு அவரை எதிர்கொண்டழைக்கச் சென்றார்கள். அவர் அதை ஏற்றுக் கொள்ளாது அவமானப் படுத்தி அனுப்பினர். 'பெண்ணென்றால் பேயுமிரங்கு மென்பார்'' ஆனால் இந்தப் பெரிய பாதிரிக்கு அத்தனை இரக்கங்கூட இல்லாது போனது ஆச்சரியமே. அதிலும் பெண்களுக்கு மதிப்புக் கொடுக்கும் ஆங்கில குலத்தவர் செய்தது மிகவும் ஆச்சரியமே. இத்தோடு முடிந்ததா! கடந்த 1925 ஹு ஜூலை மீ '27 ௳ இந்தப் பெரிய குருவானவர் தன் உதவிக் குருவாகிய இன்னொரு ஆங்கிலக் குருவோடும், போலீஸோடும், பட்டாளத்தோடும், பயங்கர ரூபமாக வந்து நின்று கொண்டு, கடவுள் ஆலயமென்று சிறிதும் அச்சமில்லாது கதவுகளை உடைத்ததையும், ஆலயத்திற்குள்ளிருந்தவர்களை போலீஸார் மூலம் அடித்துத் துரத்தியதையும், சாமான்களை தூக்கிக் கொண்டு போனதையும் பார்த்திருப்போர் விசனிக்காமலிரார். இத்தனை கஷ்டத்தையும் அனுபவித்த பின் தாம் பிறந்த மண்ணின் வீரியத்தைக் காட்ட வேண்டுமெனக் கருதி ஒரே பிடிவாதமாய் ஆங்கிலேயர் ஆவியே இனிமேல் நமக்கு வேண்டாம்; எந்தக் கஷ்டப்பட்டாவது நமது சுய அதிகாரத்திற்குள் இந்த ஆலயத்தை வைத்து நடத்த வேண்டும் என்ற ஒரே முயற்சியினால் ஆலயத்தையும் வாங்கி, குருவானவரையும் கொண்டு வந்து வெகு சிறப்புடன் நடத்திவருகிறோம் என்பதை நேயர்கள் அறிவர்.

ஆனால் இந்த உலகத்தை ரக்ஷிக்க வந்த ஏசுபெருமான் இந்த உலகத்தில் மனுஷ அவதாரம் எடுத்திருக்கையில் தன் உயிரை வேண்டுமானாலும் கொடுப்பதாக உறுதி சொல்லி அவரோடே சாப்பிடவும், கூடவே யிருக்கவுமாய் அவருக்கு உயிர்த்தோழனாயிருந்த யூதாஸ் என்ற சீஷன் அவரைப்பிடித்து சிலுவை மரத்தில் அடித்துக்கொல்லுவதற்கு 30 வெள்ளிக்காசை வாங்கிக் கொண்டு காட்டிக் கொடுத்ததைப்போல் இந்த விடாமுயற்சியுடன் உழைத்து வரும் சபையோர்களுடனே இருந்து கொண்டு ஆங்கிலேய குருக்களுக்கும் உதவிசெய்யும் நண்பர்கள் பலர் இப்போது தோன்றியிருக்கிறார்களெனத் தெரிகிறது. இவர்கள் ஆங்கிலேயருக்கு அந்தரங்க சீஷர்களாக இருப்பதுமில்லாமல் சபையோர்களில் அநேகரை கீழ்கண்டவாறு சமயம்பார்த்து கலைத்துவிட வழிபார்க்கிறார்கள்.

1. பிஷப்இல்லாது போனால் நமக்கு பாதிரிமார்கள் எங்கேயிருந்து வருவார்கள்.

2. நம் சுயதேசம் போனால் எந்த ஆலயத்திற்குப் போகிறது. அப்படிப் போனாலும் தடைசெய்வார்கள்.

3. பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் படிக்க முடியாது.

4. கலியாணம், சாவு முதலிய நேரங்களில் கஷ்டப்பட நேரிடும் என்று இன்னும் அநேக விதமானவைகளைச் சொல்லி ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். இவர்களைக் குறித்து என்னசொல்வது! இவர்கள் பிறந்த மண் அத்தனை வீரியமற்றதுஎன்றுசொல்லலாமா; அல்லது எவ்வாறுதான் அழைப்பது? இப்பேர்பட்டவர்களுக்கு எவ்வரங் கிட்டுமோ? ஆண்டவன் கடாக்ஷம் போலிருக்கட்டும். சாத்தான் உங்களை வஞ்சிக்க சிங்கத்தைப்போல் கெர்ச்சித்துக் கொண்டு அலைகிறான்; சாத்தான் உங்களை வஞ்சிக்காதபடி எச்சரிக்கையாயிருங்கள் என்று வேதபுத்தகம் கூறுகிறது. அதே பிரகாரம் நான் இவ்வளவு தூரம் வருமுன் பட்டபாடுகளையும் விசேஷமாக கடந்த வருடம் நடைபெற்ற ஆங்கிலேய ஆரவாரத்தையும் ஞாபகத்திற்கு கொண்டு வந்து நம்முன் எப்போதும் ஓர் படம் போல் நிறுத்தி ''ஊக்கமது கைவிடேல்'' என்பதை ஓர் கேடகமாகக் கொள்ளுங்கள். எம்மை வஞ்சிக்க வழிதேடுபவர் களினின்றும் காக்க, இதுவரையும் நம்மைக்காத்து இந்த நிலைமைக்குக் கொண்டுவந்த கடவுள் தான் வழி கொடுக்கவேண்டும்.

ஓர் அபிமானி.

**பூட்டைத் திறப்பது கையாலே மனப் பூட்டைத் திறப்பது மெய்யாலே.**

## தாவரங்கள் பேசுகின்றன!

''சண்டே கிரானிகல்'' என்னும் பத்திரிகையில் வெளியான கட்டுரையின் சாராம்சம் பின் வருமாறு:—

மரங்களும் செடிகளும் பார்க்கும் சக்தியும், உணரும் சக்தியும் பெற்றிருக்கின்றனவென்னும் ஆச்சரியமான உண்மையை இந்திய விஞ்ஞான சாஸ்திரி ஒருவர் கண்டு பிடித்திருக்கிறார். மிக நுண்ணிய கருவிகளைக்கொண்டு ஸர் ஜகதீச சந்திரவஸு சோதனை நடத்திக் கண்டுபிடித்திருக்கும் உண்மைகளிலிருந்து தாவரங்களுடன் மனிதன் பேசிப்பழகுதல் சாத்தியமென்று தெரிய வந்திருக்கிறது. சில காலத்துக்கு முன் வரைமரங்கள், செடிகள் இவற்றின் உயிர் அமைப்பும் மனிதர்களின் உயிர் அமைப்பும் முற்றும் வெவ்வேறானவை என்று கருதப்பட்டு வந்தது. இதை மறுத்து, பிராணிகளின் உயிர் அமைப்பும் தாவரங்களின் உயிர் அமைப்பும் ஒருவகைத்தேஎன்றுஸர்ஜகதீசசந்திரவஸு கூறுகிறார். தாவரத்தைசங்கூரம் போட்ட பிராணியென்றும், பிராணியை நகரும் தாவரம் என்றும் சொல்லலாம் என்பது அவர் கொள்கை. நாயின் குரைப்பையும், பூனையின் கத்தலையும் நாம் இப்போது எவ்வளவு தெளிவாக அறிந்து கொள்கிறோமோ அவ்வளவு தெளிவாகத் தாவரத்தின் பேச்சையும் அறிந்துகொள்ளுங்காலம் விரைவில் வருமென்று கூறலாம். முதன் முதலில் ஸ்ரீமான் வஸு தமது ஆராய்ச்சியின் முடிவைத் தெரிவித்தபோது உலகம் திடுக்கிட்டுப் போயிற்று. ''நம்பவே முடியாது, ஒரு நாளுமில்லை'' யென்று விஞ்ஞானப் புலவர்கள் கூறினார்கள். கடைசியில், மேற்படி இந்திய விஞ்ஞானி தமது நுண்ணிய கருவிகளின் மூலம் தமது கொள்கையை நிரூபித்த பின்னரே அவர்கள் நம்பலானார்கள். சாதாரண மனிதன் ஒருவனுக்கு ஒரு மரம் வெட்டி வீழ்த்தப்படும் காட்சியில் எவ்வித உணர்ச்சியும் உண்டாவதில்லை. ஸர் ஜகதீசரின் கண்களுக்கோ அது ஒரு மகத்தான துயா சம்பவம். மனிதன் உயிர் போகும் போது அவன் உடலில் எவ்விதத் துடிப்பு ஏற்படுகிறதோ அதேவிதத் துடிப்பு அந்த மரத்திலும் ஏற்படுகிறதாம். இவ்வாறு தாவரத்தின் மரண உணர்ச்சிகளைப் பதிவு செய்யுங் கருவியொன்றையும் அவர் செய்திருக்கிறார். மரங்களுக்கு ஐந்து புலன்களின்றி ஆறுவது புலன் ஒன்றும் இருக்கலாமென்று ஸர் ஜகதீச சந்திரர் அபிப்பிராயப்படுகிறார். ஆனால் இது இன்னும் நிச்சயப்படுத்தப்படவில்லை. சில சோதனைகளில் தாவரத்தின் இருதயத் துடிப்பைப் பதிவு செய்து கொண்டேயிருக்கும்போது யாரோ சிலர் வந்ததும் துடிப்புவித்தியாசப்பட்டதென்றும், அவர்கள் போனதும் மீண்டும் முன் நிலைக்குவந்ததென்றும் அவர் கூறுகிறார்! மரத்தின் சம்பாஷணையை கிராமபோன் ரிகார்டில் எடுக்கக்கூடிய காலம் கூடிய சீக்கிரம் வரலாமென்று தோன்றுகிறது!

## விருதுநகர்.

மகாத்மாகாந்தியடிகளின் 58-வது பிறந்ததினக் கொண்டாட்டத்தைப் பற்றி யோசிப்பதற்காக 9—9—26-ல் ராவ்பகதூர் த. இரத்தினசாமிநாடார் ஞாபகச்சின்னவாசகசாலையின் நிர்வாகக் கூட்டம் நடைபெற்றது. ஏராளமான அங்கத்தினர் விஜயஞ்செய்திருந்தனர்.

நாளது அக்ஷயஹு புரட்டாசிமீ 16௳ (2—10—26) சனிக்கிழமை காந்தியடிகளின் 58-வது பிறந்த தினத்தைக் கொண்டாடவேண்டுமென்றும் அவ்வைபவத்தை சிறப்பாக நடத்துவதற்கு ஸ்ரீமான் தே. அ. மா. அருணாசலநாடார் தலைமையில் பலமான கமிட்டியொன்று வேலைசெய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. கொண்டாட்டத்தில் தலைமைவகிக்குமாறு 'தமிழ்நாடு' பத்திராதிபர் டாக்டர் வரதராஜுலுநாயுடு அவர்களை வேண்டிக் கொள்ளப்பட்டிருக்கிறது. உலக சிரேஷ்டரான மகாத்மாகாந்தியடிகளின் பிறந்ததினத்தை மகாபுண்ணியதினமாகக் கருதி கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோமென்று மேற்படி கமிட்டி காரியதரிசி ஸ்ரீமான் பெ. சுப்பிரமணியநாடார் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

ஸ்ரீ

# நாடார்குல மித்திரன்.

1926
செப்டம்பர் மீ 13 உ

## சட்டசபைத்தேர்தல்.

### நாடார் சமுதாயத்தவர்க்கோர் விழிப்புரை.

திருநெல்வேலி ஜில்லா விலுள்ள வக்கீல்களில் பிரசித்திபெற்ற டானியல் தாமஸ்நாடாரவர்கள் சட்டசபைக்கு அங்கத்தினராகவிரும்பி, ஜனசமூகங்களுக்கு நன்மை பெரிதும் விளைக்கவேண்டுமென்ற உத்தரவாதத்தைத் தன் திண் தோள்களில் எடுத்துக்கொண்டது நம் நாடார் சமூகமும். இரு ஜில்லாக்களிலடங்கிய கிறஸ்தவ சமூகமும் முப்பிறப்பிற்செய்த நல்வினைப்பயனாம். இம்மட்டும் நம்மிற் பலரை ஏமாற்றி உங்களுக்காக உழைத்து வருவோம் என்று முன்பின் யோசியாது வாக்கு கொடுத்துப் போனபுலிகள்யாவும் நமக்குச் செய்துள்ள நன்மைகள் ஒரு சிலவேனும் உண்டோ? இல்லையே. இனி இவர்போய்ச் செய்வதென்ன வென்று நாம் நினைக்கவே வேண்டாம். அங்கத்தினர் எல்லாம் அங்கத்தினரல்லர். நாடார்சமுதாயத்துக்கும், கிறிஸ்தவசமுதாயத்துக்குந்தக்க நன்மைகள் பிறக்கக்காலம் இதுவே! காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வோம். ஏற்றகாலத்திலே இனிது. முயன்று காரியங்களைச் சித்திக்கச் செய்வோம். அணைகடந்தவெள்ளம் அழுதாலும்வராது. கிறிஸ்து பெருமான் விளக்கிக்காட்டிய புத்தியுள்ள கன்னிகைகளைப்போல ஊக்கமாயிருப்போம். விழித்திருப்போம். நன்றெனக்காணப்படும் செயல்களை இன்றே செய்வோம்.

பிறமதஸ்தர்களும் குலத்தவர்களும் நம் ஒற்றுமையான உழைப்பையும் கவனித்து வருகிறார்கள் என்று நாம் மறந்துபோகாதிருப்போமாக. நமக்குள்ளே ஒருவருக்கொருவர் மனஸ்தாபங்களிருக்கலாம். எனினும் பொது நன்மைக்கெனயாவற்றையும் மறந்து உப்புக்கொண்டுபோகத்தக்காக ஓடுவோம். காலத்தைத் தவறவிட்டுவருந்துவதிற் பயனில்லை. சென்றமுறை மெம்பர்களாக விருந்தவர்களிற் சிலர் இன்னும் தம் ஜனப்பெருக்கத்தைக் கொண்டும் பணப்பெருக்கத்தைக் கொண்டும் மீண்டும் ஒருமுறை அங்கத்தினராக அமையலாம் என்று இடம் செய்துகொண்டு வருவார்களானால் நாம் செய்யவேண்டியது எவ்வளவு தூரம் அவசியம்! இவ்விரு ஜில்லாக்களும் நம நாடார்குலப் பெருக்கத்திலும், கிறிஸ்தவ மதப்பெருக்கத்திலும் சிறந்துள்ளதேயன்றிக் குறைந்திலது. லக்ஷக்கணக்கான நாடார்களும் கிறிஸ்தவர்களும் ஓட்டர்களாயிருக்க நாம் ஏன் கலங்கவேண்டும்? வேண்டுவதில்லையே!

ஸ்ரீமான் டானியல் தாமஸ்நாடாரவர்களை அங்கத்தினராக ஆதரிக்கும் விஷயத்தில் இராஜாங்க வழியாய் நமக்கு அரிய உதவி செய்வார்கள். அதுவுமன்றி குலத்திற்கும், மதத்திற்கும் எத்துணை மேன்மை கிட்டுகின்றது! கிறிஸ்தவ அங்கத்தினராக ஷை நாடாரவர்கள் நிற்கும் உரிமை நாடார் சமுதாயத்தவர் சைவர்களாயிருப்பினும், வைணவர்களாயிருப்பினும், கிறிஸ்தவர்களாயிருப்பினும் அவர்களில் எவருக்கும் பேதகங்களின்றி பொது உரிமையும் அபிமானத்தையும் வளர்க்குமென்பதில் ஐயமில்லை. ஏனெனில் திருநெல்வேலிஜில்லா விற்பெரும்பாலும் கிறிஸ்தவர்களாயிருப்பவர்கள் நாடார்குலத்தவரேயாவர். சேரர், சோழர், பாண்டியர் என்று மூவேந்தர்களிருந்து நம்குலத்தை விளக்கிய காலம் அறவே அழிந்து போனாலும் இப்படிக்காலாகாலங்களில் அவ்வாசமரபில் உதித்து இராஜ சாமர்த்தியம், அமிசம், அன்பு பொருந்திய குலக்கொழுந்துகளை சட்டசபையிலளிக்கப்படும் ஆசனங்களிலேனும் இருக்கச்செய்வோம். நம்முடைய சிம்ம ஆசனங்கள் எங்கே? சிறந்த அரசுரிமைஎங்கே? நாடார் சமுதாயமே விழித்துக்கொள். உன் பிள்ளைகளை இவ்விஷயங்களிலாயினும் வளர்த்திடுக. நீ முயற்சி எடுத்து உன்மகனை சட்டசபைக்கு அனுப்பி அங்கே அவன் தன்திறமையின் மிகுதியில் மந்திரியாவதையும், அதினும் மேலான நிலைமையிலிருப்பதையும் உனக்கு மீட்பையும், மேன்மையையும் விளைப்பதைக்காண்பாய். கண்டு மகிழுவாய்.

நாடார் கிறிஸ்தவ சமுதாயமே, தூக்கம் வேண்டாம். நல்லூக்கம் கொள். எவருக்குவந்தவிருந்தோ என்றிருப்பாயானால் உன் க்ஷத்திரியகுல ஆண்மைக்குப் பங்கமாகுமேயன்றோ? ஓட்டர்கள் பட்டணங்களிலும் பட்டிகளிலும்கலந்திருப்பதால்பட்டிகளிலும் சிறந்த முயற்சிகள் இது விஷயமாய் எடுத்துக்கொள்வோம். இம்முயற்சிகளுக்குத்தக்க ஆதாரங்களும் ஏதுக்களுமாயிருப்பவர்கள் பட்டிகளில் கிறிஸ்தவ ஊழியஞ்செய்யும் உபாத்திமார்களேயாவர். அப்படியிருப்பவர்கள் தயவுசெய்து ஊக்கங்கொள்ளும்படி கேட்கிறோம். சொல்சக்தியுள்ள நாடார் துரைமக்களே! கேண்மின். குலாபிமானங்கொண்மின். எண்டும் சென்று உழைமின். பாடுபட்டாற் பலனுண்டு. வாழ்வு பின்னால்வருகிறது. நம் மாவியன்றவரை ஓட்டுக்களை எல்லாவற்றையும் ஸ்ரீமான் டானியேல்தாமஸ் நாடார் அவர்களுக்கே கொடுப்போம். முயற்சி திருவினையாக்கும். நம்மைக் கவனித்துக்கொண்டிருக்கும் பிறகுலங்களும், பிறமதங்களும் நகையாவண்ணம் முயல்வோம்.

ஆ. ஜெபரத்தினம்நாடார்,
குறும்பலாப்பேரி.

## தூத்துக்குடியில்ஒருநாடாரின் தருமஸ்தாபனம்.

சம்மைத் தேர்ந்தெடுத்த 5-வது வார்டு வாசிகளின் நன்மைக்காக சொந்தத்திலிருந்து ரூ 1000வரை செலவு செய்து, அந்தவார்டில் பிரபலஸ்தர்களான ஸ்ரீமான் களான் சாமக்காத்த நாடார், ராஜகுஞ்சர நாடாரவர்களின் பேருதவியைக் கொண்டும், ஸ்ரீமான் வி. மாசிலாமணி நாடார் அரும் பிரயாசைப் பட்டு கட்டுவித்த கிணற்றுக்கு நேற்று முதல் (1-9-26) ஜலம் சப்ளை செய்யப்பட்டு வருகிறதை முன்னிட்டு ஓர் வைபவம் நடந்தது. வரி வசூல் ஆபீஸர் ஸ்ரீமான் டி. ஆர். வைகாம்பரம் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு ஊரிலுள்ள ஆபீஸர்களும்,பல பிரமுகர்களும் வந்திருந்தனர். முதலாவதாக சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. பின்னர் ஸ்ரீமான் மாசிலாமணி நாடார் கிணற்றை திறந்துவைக்கும்படி தலைவரைக் கேட்டுக் கொண்டு சில வார்த்தைகள் பேசினார். செயற்கரியதுசெய்வர் பெரியர் என்பதற்கிணங்க ஸ்ரீமான் மாசிலாமணி நாடாரும், அவர் சகாக்களும் எடுத்துக்கொண்ட அரியமுயற்சிக்கும், பொருட்கொடைக்கும்பெரிதும் வியந்துகூறி, இந்நகர் சம்பந்தமாக பல குறைகள் தாம் காணக்கிடக்கின்றன வென்றும், அநேகம் ஏழைகள் தெருக்களில் இறந்துகிடக்கக்காணப்படுகின்றனவென்றும்,கூலிவேலைசெய்யும் தொழிலாளிகளுக்கு கல்வி கற்பிக்க கல்வி வசதியில்லையென்றும், சரியானபடி வெளிச்சம் இராக்காலங்களில் காணப்படவில்லையென்றும், தண்ணீர்க் கஷ்டம் நீங்கியபாடில்லையென்றும், இதை நிவர்த்திக்க கோடீஸ்வரப் பிரபுக்களும் லக்ஷாதிபதிகளும் நிறைந்த இவ்வூரில் ஸ்ரீமான் நாடார் போன்றபலர் கருணை புரிவார்களேயானால்ஏழைகளின் கஷ்டம் நீங்கி நகரமானது சுபிக்ஷமாக இருக்குமென்றும், அவர்களுக்கு ஈஸ்வர கிருபையு மேற்படுமென்றும், அனாவசியமாக எவ்வளவோ விஷயங்களில் விரயஞ் செய்யும் பணத்தைப் பொது ஜன சேவைக்காக செலவழித்தால் தேவாசீர்வாதத்திற்கு பாத்திரமாக சாதனமாகுமென்றும்கூறி மகாத்மா காந்திமுதலிய உலக சிரேஷ்டர்களான தமக்கென வாழாப் பெரியாரைப்பின்பற்றி நடப்பதே மக்களின் கடமையென்றும் உருக்கமாக தலைவர் பேசினார். ஸ்ரீமான் நாடாரின் தர்ம சிந்தனையைப் பலவாறாகப் புகழ்ந்தும் சில மொழிகள் பகர்ந்தார். ஸ்ரீமான் அ. சுந்தரேசய்யர் வந்தனோபசாரங் கூறியதும் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு தலைவருக்கு பூமாலைசூட்டப்பட்டு கூட்டம்இனிது முடிந்தது என நமது நிருபர் எழுதுகிறார்.

## பலதிரட்டு.

### மலைச்சரிவு.

பர்மாவில் வடக்கு ஷான் சமஸ்தானத்தில் ஆகஸ்டு 16-ந்தேதியன்று மாலை 6-மணிக்கு ஒரு பெரிய மலைச்சரிவு ஏற்பட்டு, 70 தொழிலாளர்களின் வாசஸ்தலம் சேதமாகிவிட்டது.

இருபது பிரேதங்கள் வரை உடனே கிடைத்தன. 20 பேர்களுக்கு மேல் பலத்தகாயம். ஏராளமான மழை பெய்தது தான் இச்சரிவுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

### புதிய ரயில்வே திறப்பு.

நஞ்சங்கோடு சாமராஜநகர் ரயில் பாதையை 27-8-26-ல் மாலை மைசூர் மகாராஜா திறந்துவைத்தார். அவ்வமயம் சுமார் பதினாயிரம் ஜனங்கள் வந்து கூடியிருந்தனர்.

### ஒரு கோரமான கொலை.

நாகலாதபுரம் புதூரில் 7-வயதுள்ள ஒரு பெண்குழந்தை ரூ 50 விலை மதிப்புள்ள நகை அணிந்திருந்ததை அபகரித்துக்கொள்ள எண்ணி, ஒரு நாயுடு பெண் ஷை குழந்தையை தன் வீட்டு மேல் மாடிக்கு அழைத்துக்கொண்டு போய் கொன்றுவிட்டாள். விஷயம் வெளிப்பட்டு ஷை கொலைகாரி கைது செய்யப்பட்டாள்.

### கணவன் மேல் சந்தேகம்.

லால்குடியைச் சேர்ந்த சிறுகை யூரிலிருந்துவரும் 25-வயதுள்ள ஸ்ரீமான் கே. எஸ். சங்கரராஜஅய்யர் பீ. ஏ. என்பவரின் மனைவி லக்ஷிமியம்மாள் 27—8—26-ல் மாலை 2-மணிக்கு லால்குடியை அடுத்த ஒரு மைல் தூரத்திலுள்ள மணக்கால் என்னும் கிராமத்தில் கொலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிந்து போலீஸார் கணவனை கைது செய்திருக்கிறார்கள்.

### ஒருகமிஷனருக்குத்தண்டனை

காசிமுனிசிபல் கமிஷனர் மாக்டோனல்டு, கொள்ளைக்காரர்களுக்கு இடம் கொடுத்து மறைத்ததாக ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். இ. பி. கோ. 212 விதியின்படி குற்றம் செய்ததாயும் அவர் படித்து செல்வாக்குடையவராயிருந்தும் தமது கடமையை லக்ஷியம் செய்யாமல் கொள்ளைக்காரர்களுக்கு உதவி செய்ததாயும், ஆகையால் கடுங்காவல் தண்டனை விதிக்கவேண்டுமென்றும் மாஜிஸ்ட்ரேட் கூறுகிறார்.

### வெள்ளச்சேதம்.

ஒரிஸாவில் மகாநதி, பிராமணி முதலிய நதிகளில் 18—8—26-முதல் வெள்ளம் அதிகரித்துக்கொண்டு வருவதால் கட்டாக், பூரி,பால்சோர்முதலிய ஜில்லாக்களில் வெள்ளச்சேதம் ஏற்பட்டிருக்கிறது. பயிர்களுக்கும் அதிக சேதம் ஏற்பட்டிருக்கிறது. 6 பேர்களுக்கு உயிர்ச்சேதம். வெள்ளத்தால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு ஆகாரம் உதவப்படுகிறது.

### புத்திரசோகத்தால்தற்கொலை.

சென்னையில் அம்புஜம்மாள் என்ற 50 வயதுள்ள ஸ்திரீ, தனது பிள்ளை நல்லையா தாக்காலத்தில் இறந்துவிட்ட காரணத்தினால் துக்கம் அடைந்து, 2—9—26 பிற்பகலில் கடலில் விழுந்து இறந்து போனாள். பிரேதம் வலையரால் கண்டு எடுக்கப்பட்டது.

## தூரதிருஷ்டி.

பெண்களுக்கு ராணுவப்பயிற்சி:—ருஷ்யதேசச் சவர்ன்மெண்டார் பெண்மக்களையும் ராணுவத்தில் சேர்த்து பயிற்சிக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றனர். ஆனால் பெண்மக்களுக்கு தளகர்த்தர் பதவி யளிக்க முடியாதாம். யுத்தகாலத்தில் ராணுவத்தில் பின்னணியிலிருந்து கொண்டு முக்கியமான வேலைகளைச் செய்யும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறார்கள்.

*　*

ராஜிநாமா:—பாரசீக மந்திரி சபையில் நிலைமை மிகவும் நெருக்கடியாயிருக்கிறது. பிரதம மந்திரி 3-வது முறையாக தமது ராஜிநாமாவை அனுப்பியிருக்கிறார். அதில் தனக்கு பெரும்பான்மையோருடைய ஆதரவு கிடைக்கவில்லை என்று காரணம் கூறுகிறார்.

*　*

மாஜிகெய்சருக்குச்செய்தி:—பழைய கெய்சரின்மேல்விஸ்வாசமுள்ள தேசியவாதிகள் மாஜிகெய்சருக்குக் கீழ்க்கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறார்கள்:—இங்குகூடிய வீரர்கள் தங்களது தலைவர்களை மறக்கமாட்டார்கள். போராட்ட உணர்ச்சியும், சுதந்திர உணர்ச்சியும் ஜெர்மானியருக்குள் இன்னும் இருந்துவருகின்றன. அவர்கள் மீண்டும் சந்தோஷமான காலத்தை அடைவார்கள் என்று நம்புகின்றோம்.

*　*

தீக்கிரையாயிற்று:—நியூயார்க்கில் 5 அடுக்கு மாடியுள்ள வீடு தீப்பற்றி எரிந்தது. இதில் குடியிருந்த நீக்ரோயர் உயிர்தப்பமுடியவில்லை. இதற்குக் காரணம், வீட்டின் முன்பு பூமியின் கீழ் இருப்புப்பாதை போடுவதற்கு அரண்வெட்டப்பட்டதுதான். நெருப்பணைக்கின்றவர்கள் ஏணியை வைக்க முடியவில்லை. பல நீக்ரோயர்கள் ஜன்னல் வழியாகக் குதித்தார்கள். அநேகம்பேர்கள் காயப்பட்டார்கள். 5 பேர் இறந்தனர்.

*　*

ஒப்பந்தம்:—ஆப்கனும் ருசியாவும் ஒரு உடன்படிக்கைசெய்து கொண்டிருக்கின்றன. அதன்படி இரண்டு நாடும் ஒன்றை ஒன்று வலுவில் படையெடுக்கமாட்டா. இவ்விரண்டு நாடுகளில் யாதேனுமொன்றை மற்றொரு நாடு தாக்கினால், இவ்விரண்டு நாடுகளில் தாக்கப்படாமலிருக்கும் நாடு நடுநிலைமை வகிக்கவேண்டும். இவ்விரண்டுநாடுகளும் பரஸ்பரம் உள்நாட்டு விஷயங்களில் தலையிட்டுக் கொள்ளமாட்டா. 3-வது தேசத்துடன் இவற்றில் எதுவும் விரோதமாக உடன்படிக்கை செய்து கொள்ளமாட்டாது.

*　*

தர்மஸ்தாபனச் சட்டத்தை சுயராஜ்யக்கட்சியார் ஒழித்து விட்டால், சுயராஜ்யக் கட்சித் தேர்தலுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுப்ப தென்று மகந்துகளுக்கும், மடாதிபதிகளுக்கும், சுயராஜ்யக்கட்சித் தலைவருக்கும் ஓர் ஒப்பந்தம் நடந்திருக்கிறதென்று குடியரசு கூறுகிறது.

*　*

விடியற்காலத்தில் ஆட்டி விருந்து வெட்டிய, கப்பளி மயிரால், 10-மணி நேரத்தில் நெய்து ஆகாய விமானத்தில் கொணர்ந்த மேற் சட்டை ஒன்றைக்கானடர் கண்காட்சியைத் திறந்த முதல் நாளன்று சென்ற வாரத்தில் கூபக் கவர்னருக்குப் பரிசளித்தார்கள்.

எலிமெண்டரி பாட ரத்தினங்கள்.

விவிக்ஸ், நேச்சர் ஸ்டடி ஸயன்ஸ். அடங்கியது. எல்லாப் பாடசாலைகளுக்கும் உபாத்திமாருக்கும் மிகவும் அவஸியம். 3-ம் பதிப்பு விலை அணு 14. இது ஆசிரியரிடமும, சென்னைவேப்பேரி, எஸ். பி. வி. கே. டிப்போவிலும் கிடைக்கும்.

ஜேம் வக்கபிளரி.

இங்லீஷ் தமிழ் முதல் புஸ்தகம் 6 அணு; 2-ம் புஸ்தகம் 8 அணு. 6 மாதத்தில் இங்கிலீஷ் பேச எழுத லேசாய்க்கற்க எல்லாருக்கும் மெத்த அவஸியம். ஒரு நேர்த்தியான லெட்டர் ரைட்டரும் அடங்கும். இது ஆசிரியர் நாகபட்டணம் மிஷின் ஹைஸ்கூல் ஆசிரியா எஸ். வி. கோயில்பிள்ளையிடமும் ஆரணி மிஷின் பிரஸிலும், ஷை சென்னை எஸ். பி. வி. கே. டிப்போவிலும் கிடைக்கும். உபாத்திமாருக்கும் வியாபாரிகளுக்கும் 12 ஜதைக்குமேல் விசேஷித்த கமிஷன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## வேற்றுமைப் பேச்சால் விளையும் பயன்.

ஜனசாரம் காரணமாகத் தென்னாட்டில் சில இடங்களில் நெடுங்காலமாகவே பிராமணர், பிராமணரல்லாதார் வேற்றுமையிருந்து வருகிறது. அரசியல் விஷயம் சேர்ந்தபின் இந்தவேற்றுமை கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியிருக்கிறது. ஒவ்வொரு வகுப்பாரிடமும், ஜாதியாரிடமும் முன்னகுற்றம் குறைகளை எடுத்துக் கூறி அவற்றை ஒழிக்க முயல்வது தவருகாது. ஆனால் அவரைக் காரணமாகக்கொண்டு நாட்டிலே பல்லாயிரம் ஆண்டுகளாகச் சேர்ந்து வாழும் மக்களிடையே வகுப்பு வேற்றுமையை வளர்க்க முயலுதல் நாட்டின் நன்மையை நாடும் அறிவுடையோர் செயலாகாது. தற்காலப் பிராமணர்களிடம் எண்ணிறந்த அநியாயங்களும், அதர்மங்களும் இருக்கின்றன என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் மற்ற ஜாதியாரெல்லாம் முற்றிலும் தர்மமும், நீதியும், சத்தியமும் பொருந்தி வாழ்கிறார்களென்று சொல்லவும் முடியாது. எல்லோரிடமும் குறைகள் இருக்கின்றன. சிலரிடம் பெருகியிருக்கலாம்; சிலரிடம் குறைவாக இருக்கலாம். அவற்றை அமைதியான முறைகளால் ஒழிக்க முயலுதல் அறிவுடையோர் கடனே. ஆனால் அதற்காகப் பெரியதோர் ஜாதிப்பகை நாட்டிலே வளருமாறு கருத்தாலோ, பேச்சாலோ, எழுத்தாலோ செய்தல் நாட்டிற்குக் கேடு சூழ்வதேயாகும்.

இத்தகைய மனப் பான்மைக்குரிய வேற்றுமையை நாம்வளர்த்துக் கொண்டுபோனால், பிற்காலத்தில் நாட்டின் கதி என்ன ஆகுமென்பதை அறிஞர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

ஒத்துழையாமை மும்முரமாக இருந்தகாலத்தில், அன்னிய அதிகாரவர்க்கத்தின் மீதிருந்த ஆத்திரமெல்லாம் இப்பொழுது பிராமணர், பிராமணரல்லாதார் வேற்றுமையில் வந்து இறங்கியிருக்கிறது. இதற்காக அதிகாரவர்க்கத்தார் ஆயிரங்கோடி தேங்காய் கூட உடைக்கலாம்!

இன்று பிராமணர், பிராமணரல்லாதார் வேற்றுமை வளர்கிறது. நாளை முதலியார், பிள்ளையார் வேற்றுமை; பின்னர் நாயகர், நாடார் வேற்றுமை; பின் ஆதி திராவிடர்—மற்ற ஜாதியார் வேற்றுமை என்று இவ்வாறு வளர்ந்து கொண்டுபோகலாம். ஒவ்வொரு ஜாதியாருக்கும், ஒவ்வொரு வகுப்பாருக்கும் மற்ற ஜாதியார் மீதும் வகுப்பார்மீதும் குறைகள் இருக்கின்றன. அவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சண்டை பிடித்து மண்டை யுடைத்துக் கொண்டால், நாட்டின் நன்மையை நாடுவதாகக்கூறும் தேசாபிமானிக்கும் தலைவருக்கும் என்ன வேலை? எல்லா ஜாதியும் வகுப்பும் சேர்ந்து தானே தேசம்? அவர்கள் எல்லோரும் நலமடைவதற்காக வன்றோ தேசாபிமானிகள் என்பவர்கள் பாடுபடுகிறார்கள்?

தென்னாட்டிலுள்ள பார்ப்பனர்கள் எல்லாம் ஆரியர்களென்றும், அவர்கள் அனைவரையும், இமயமலைக்கு அப்பால் ஓட்டிவிட்டால் தான் நாம் சுகமாக வாழ முடியுமென்றும் விநோத தோரணையிலே சில நண்பர்கள் பேசுகிறார்கள். அவர்கள் தங்களை மறந்து பேசுகிறார்களென்றே நாம் கருதுகிறோம். தென்னாட்டிலுள்ள பார்ப்பனர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒருக்கால் ஆரியர்களாயிருந்திருக்கலாம். ஆனால் இன்று அவர்கள் ஆரியர்களல்லர். எல்லோரும் தமிழர்கள். அவர்களிடமுள்ள குற்றங் குறைகளை, அவர்கள் செய்யும் அநியாயங்களை, அக்கிரமங்களை ஒழிக்குமாறு செய்கையில் செய்வதையாரும் தடுக்கவில்லை. ஆனால் இன்றிருந்து நாளை மறந்து போகக் கூடிய சிறிய அரசியல் கட்சி வேற்றுமையை முன்னிட்டு பிராமணர், பிராமணரல்லார் வேற்றுமையைப் பெரிதும் வளர்த்து அந்தவாசனையே யில்லாதவர்களிடமும் அந்த விஷயத்தை ஏற்ற முயலுதல் அறிவுடையவர்களுக்கு அழகா என்று நாம் கேட்க விரும்புகிறோம். நாட்டின் நன்மையை நாடும் நல்லோர்கள் இதனைச் சிந்திக்கவேண்டும்.

## துண்டுத் துணுக்குகள்.

ஜெர்மனியில் ஆடைகளின்றி நிர்வாணமாக வாழ வேண்டுமென்று ஒரு திருக்கூட்டம் தோன்றியிருக்கிறது. அதில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகத் தங்கள் கொள்கைகளைப் பரப்பிவருகிறார்கள். ஆடையுடுத்துவது அநாவசியமென்றும், சுகக்கேடென்றும் அவர்கள் கருதுகிறார்கள். ஆடையின்றி யிருப்பதில் அவமானம் ஒன்று மில்லை யென்றும், உடல் நலமும் அழகும் அதனால் வளருமென்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

* *

வாழ்வுக்கும் சாவுக்கும் மனமே காரணமென்பதை விளக்கும் ஒரு கதை இப்பொழுது வெளியாயிருக்கிறது. 1914-ம் ஆண்டில் லண்டனை அடுத்த ஹாரோகேட் வீடுதிக்கு ஒருமனிதன் திடீரென்று சென்று அங்கிருந்த ஒருவரை நோக்கித் தனது கைத்துப்பாக்கியைநீட்டி "நீ சாகவேண்டும். ஆனால் உன்விருப்பம் போல சாகலாம். இரண்டுமருந்து கொடுக்கிறேன். எதனையாவது ஒன்றை உட்கொண்டு நீ சாகலாம்" என்று சொல்லி இரண்டு பொட்டணங்களை காட்டினான். ஒரு பொட்டணத்திலிருந்த மருந்தைப் போட்டுத் தண்ணீரிலிட்டுக் குடித்தான். உடனே இறந்துபோனான். உண்மையில் இரண்டு பொட்டணங்களிலும் விஷமருந்து ஒன்றும் இல்லை. இரண்டும் சிமைச்சுண்ணாம்பு தான். இறந்து போனவரை வைத்திய பரிசோதனை செய்ததினாலும் அவர் வயிற்றில் சிமைச் சுண்ணாம்பு தான் இருந்ததாம். உயிரை வாங்கக் கூடிய பொருள் அதில் ஒன்றும் இல்லையாம். அச்சமே அவரைக் கொன்றதாம்.

* *

கட்டாய ராணுவச் சேவகத்தை ஒழிக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி, லாலா லஜபதிராய், கவிராயர் ரவீந்திர நாத தாகூர், அறிஞர் ஆண்டரூஸ் அன்னி பெசண்டம்மையார், மிஸ்டர் நார்மன் எஞ்சல், புரொபசர் ஈன்ஸ்டின், ஜார்ஜ் லான்ஸ்பரி முதலிய பெரியோர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இதனை சர்வதேச கட்டாய ராணுவ சேவக எதிர்ப்புச் சங்கத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

* *

திருவாவடுதுறையில் ஒரு மடாதிபதியாவது தமது ஆயுள் முடிந்து சாவதே கிடையாது; ஒவ்வொருவரும் கொலையுண்டு சாவார்கள்; அல்லது தற் கொலை செய்துகொண்டே தான் சாவார்கள் என்று சில ஆண்டுகளுக்கு முன் திருவாவடுதுறை மடத்தில் இருந்த ஒரு தாசிக்கு வைத்தியராக இருந்ததாகக் கூறும், கும்பகோணம் பவானிசிங்சென்ற வாரத்தில் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் தர்மஸ்தாபனச் சட்டத்தை ஆதரிப்பதற்காகக் கூடிய மாபெருங் கூட்டத்தில் கூறினார். தென்னாட்டிலுள்ள முக்கிய மடாதிபதிகள் எல்லோருமே தாமாகச் சமாதியடைவது கிடையாதென்று மடங்களை நெருங்கி வாழ்ந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

---

உலகம் முழுமையும் ஜாதி சமயப் பூசல்கள் ஒழிந்து, ஒரே ஜாதியும், சமயமும் நிலவுதற்குரிய புதிய யுகம் விடியப்போகும் இத் தருணத்தில் தலைவர்கள் என்பவர்கள் அதனை வரவேற்பதற் குரிய சிந்தனையும், செயலும் பொருந்தியவர்களா யிருக்கவேண்டும். அவ்வாறின்றி, புதிய யுகத்திற்கு முன் ஒழிந்துபோக வேண்டிய கலியின் தூதர்கள் போல அவர்கள் நடந்து கொண்டால் அதற்கு அவர்களைக் குறை கூருமல் இறுதியடையைப் போகும் அந்தக் கலியைத்தான் நாம் நோவவேண்டும் போலும்.

"லோகோபகாரி"

## க்ஷத்திரியகுல சன் மார்க்க பூஷணம்.

இதுவரையும் அநேகர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த க்ஷத்திரியகுல சன்மார்க்க பூஷணம். தயாராய்விட்டது. சொற்பகாப்பிகள்தான் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே நூற்றுக்கணக்கான ஆர்டர்கள் கைவசமிருக்கின்றன. வேண்டுவோர் விரைவில்எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகம் 1-க்கு விலை அணு 4.

டஜன் 1-க்கு ரூ 2—8—0. நூற்றுக்கு 20 புத்தகம் அதிகம் சேர்த்துக்கொடுக்கப்படும். வி. பி. சார்ஜ் வேறு. 1, 2, புஸ்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது. புஸ்தகம் 1-க்கு 4½ அணு ஸ்டாம்பு அனுப்பினால் புக் போஸ்ட்டில் அனுப்பப்படும்.

விலாசம்:—

"நாடார்குல மித்திரன்" புத்தகசாலை.

அருப்புக்கோட்டை.




## "எம்பயர் பாம்."

எல்லா நோய்களுக்கும் தேவாமிர்தம்.

The house hold remedy for all ailments is our "Empire Balm"

ஏஜெண்டுகள் தேவை.

புட்டி 1-க்கு ரூபாய் 0-8-0

டசன் 1-க்கு ரூ 5-0-0

விபரத்திற்கு:- எம்பயர்பாம்,மனுபாக்சரிங் கம்பெனியென்ற விலாசத்திற்கு எழுதித்தெரியவும்

கீழமாரட்டு.வீதி, மதுரை

ஜெகமெங்கும் புகழ் பெற்ற



அசல் சேட்

இ. பி. குமரவேல்

நயம் பீடிகள்

அன்பிற் சிறந்த கனவான்களே!

நாம் எல்லோரும் வெகு நாளாக நமது அசல் சேட் இ. பி. குமாரவேல் பீடிகளை தவிர மற்ற போலி பீடிகளை உபயோகப்படுத்த மாட்டோமென்பது நிச்சயமாய்த் தெரிந்தும் சிலர்கள் போலி பீடிகளைக் கொண்டு ஊர் தோறும் பல பல பெயர்கள் சொல்லி விற்பனை செய்கிறார்கள்.

ஆனதால் நமது அசல் சேட் இ. பி. குமரவேல் பீடி கட்டுகளில் ஒட்டி இருக்கும் லேபில்களை கவனமாய்ப் பார்த்து இ. பி. குமரவேல் பீடிதானா என்று கவனித்து வாங்கி உபயோகப்படுத்தி ஆனந்தியுங்கள்.

புரோப்ரைட்டர்ஸ்,

### இ. பி. குமரவேல் பீடி கம்பெனி

பிராஞ்சுகள்:—

செகன்றூபாத்து,
ஐதரூபாத்து
& கொல்லம்

ஹெட்டாபீஸ்,
முக்கூடல்.

மேலே குறிப்பிட்ட எங்கள் பிராஞ்சுகளில் நயம் பீடி பல தரங்கள் தயார்செய்து தூர தேசங்களுக்கு V. P. மூலமாயனுப்பி பெரும் இயாதியோடு நடந்தேறிவருகிறது. வேண்டியவர்கள் விபரம் எழுதி கேட்கவும்.